RE/MAX Realtron Blue Force | Team Blue Force
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
Direct 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY SIVASOTHY
647.268.2710

மலர்:- 30, 16 யூன் 2023 இதழ்:- 08

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

## நீங்கள் எனக்கு வரலாறு கற்பிக்க முயற்சிக்கின்றீர்களா? தொல்பொருள் பணிப்பாளர் பதவியை ராஜினாமா செய்தார்!



வரலாற்று முக்கியத்துவம் மிக்க விகாரைகள் உள்ளிட்டவற்றை பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். அதற்காக பொது மக்களின் காணி களை ஆக்கிரமிப்பதற்கு இடமளிக்க முடியாது. தேசிய கொள்கைகளை தொல்பொருள் திணைக்களம் தெரிவித்தார்.(9ம் பக்கம்)



## கனடாவுக்கு எதிரான தீர்மானத்தைத் தயாரிக்கும் சரத்வீரசேகர



இலங்கையில் இனப்படுகொலைகள் இடம்பெற்றன என்ற கனடாவின் பிரகடனத்தை ஏனைய நாடுகளும் அங்கீகரிக்கலாம் என எச்சரித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினரும் பாதுகாப்பு தொடர்பான நாடாளுமன்ற கண்காணிப்பு குழுவின் தலைவருமான சரத் வீரசேகர கனடாவின் அரசியல் நோக்கம் கொண்ட பொய்யை எதிர் கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

08 யூன் 2023 தேசிய பார்வை தொடர்பான கண்காணிப்பு குழுவின் கூட்டத்தில் சரத் வீரசேகர இதனை தெரிவித்துள்ளார். இந்த கூட்டத்தில் முப்படையின் தலைமை அதிகாரிகள் புலனாய்வு பிரிவுகளின் பிரதான அதிகாரிகள் கலந்து கொண்டுள்ளனர்.(5ம் பக்கம் பார்க்க)

# உதவுமா இந்தியா?



சிங்களத் தலைமைகளின் ஊடாக இந்தியாவின் நலன்களை உறுதிப்படுத்த முடியாத போது, தமிழ் தலைமைகளை வளைத்துப் போட்டு, தமிழ் அமைப்புகளுக்கு ஆயுதங்களைக் கொடுத்து, காரியம் சாதித்துக் கொண்டது இந்தியா

வடக்கு, கிழக்கில் பௌத்தமயமாக்கல் தொடர்ந்தால், இந்தியாவில் உள்ள இந்து அமைப்புகளின் உதவியைக் கோரப் போவதாகக் கூறியிருக்கிறார், பாராளுமன்ற உறுப்பினர்(21ம் பக்கம் பார்க்க)

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! யூன் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances,
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE
TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX Royal Properties
Mortgage Alliance

# வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடாவின் வரலாற்று நாயகன் திரு கனகரட்ணம் பாஸ்கரன்

[redacted]

ஈழத்தமிழரின் தொன்மையைப் பறைசாற்றி நிற்கும் யாழ்ப்பாணத்தின் தென் மேற்குத் திசையில் அமைந்திருக்கும் பல்சிறப்பு மிக்க ஊர் வேலணை. பண்டைய வணிகத்தில் முக்கியத்துவம் வாய்ந்த ஊர்காவற்துறைக்கு வர்த்தக மையமாக இது விளங்கியது. இதன் ஒருபுறம் மண் குன்றுகள் நிறைந்த மண் கும்பானையும் மறுபுறம் வெள்ளைக்கடற்கரை எனப் புகழ்பெற்ற கடற்கரையும் யாழ்ப்பாணக்குடாவில் பெரிதாகக் கருதப்படும் பெருங்குளத்தையும் பல்வேறு விவசாய நிலங்களையும் நெற்பயிர்கள் நிறைந்த பச்சைப் பசேலெனக் காட்சியளிக்கும் வயல்வெளிகளையும் பல வழிபாட்டுத்தலங்களையும் பாடசாலைகளையும் தன்னகத்தே கொண்டு தனிச்சிறப்புப் பெற்ற ஊராகத் திகழ்கின்றது. சோழர் வந்து தங்கியிருந்தமையால் சோழாவத்தை என்ற பெயரும் வேலணைக்குண்டு.



இவ்வாறான சிறப்புக்களைக் கொண்ட வேலணைக் கிராமத்தின் கிழக்கே இரண்டாம் வட்டாரத்தில் பெரியபுலம் என்ற பகுதியில் புகழ்பூத்த மூத்ததம்பி (கந்தையா) முத்துப்பிள்ளை தம்பதிக்கு தையமுத்து அன்னப்பிள்ளை அழகப் பெருமாள்(சிவசிதம்பரம்) இலகுப்பிள்ளை ஆச்சிப்பிள்ளை ஆகிய ஆறு பிள்ளைகள். மூத்தமகள் தையமுத்துவிற்கு கணபதிப்பிள்ளை தங்கம்மா செல்லம்மா செல்லத்துரை இரத்தினம் பாக்கியம் பாலசிங்கம் ஆகிய ஏழு பிள்ளைகள்.

பாக்கியம் புங்குடுதீவைச் சேர்ந்த கனகரட்ணம் என்ற ஆசிரியரைக் கரம் பிடித்தார். இத்தம்பதியினருக்கு மூத்த புதல்வராக 7-4-1955 இல் பிறந்தவர் திரு பாஸ்கரன் அவர்கள். இவருக்கு ரகு ராதா ஆகிய இரு சகோதரர்கள். பாஸ்கரன் இருபாலையைச் சேர்ந்த ரேவதி என்பவரை மணம் முடித்து ஆதி ஆரணி ஆகிய இரு பிள்ளைகள். ஆதி அபியங்கா என்பவரைத் கரம்பிடித்து ஐரா என்ற பெண்பிள்ளையைப் பெற்றெடுத்தனர். பேர்த்தியின் முதலாவது பிறந்தநாளே இவர் இறுதியாகக் கலந்து கொண்ட நிகழ்வாகும். இவர்களுடன் மகிழ்வாக வாழ்ந்து வந்த நிலையில 5-16-2023 அன்று திடீரென இயற்கை எய்தினார். இறந்த பின்பும் இவரது சிறுநீரகங்கள் இரண்டும் தானஞ் செய்யப்பட்டு 60 வயதுடைய இருவருக்குப் பொருத்தப்பட்டுள்ளமை போற்றுதற்குரிய விடயமாகும். அன்னாரது மரணச் சடங்கில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டமை அவர் வாழ்ந்த வாழ்க்கைக்கான சான்றாகும் என்றால் அது மிகையல்ல.



நத்தம்போல் கேடும் உளதாகுஞ் சாக்காடும்

வித்தகர்க் கல்லால் அரிது

சங்கு சுட்டாலும் நிறம் மாறாமல் வெண்ணிறமாவே விளங்கித் தோன்றுதல் போல், தன் தன்மை கெடாது, அரிய செயல் புரிபவர்கள் மிகச் சிலரே, சாவாதவர் போல உலகவரால் போற்றப்படுகின்றனர் இவர்கள் என்றும் இறவாது புகழால் நிலைத்து நிற்பவர்கள்' என்பதே இக்குறளின் பொருளுக்கேற்ப அன்னாரது வாழ்வு அமைந்துள்ளது அவர் செய்த புண்ணியமே.

என்னைப் பொறுத்தமட்டில் ஒரு நல்ல நண்பரை, மனிதரை, உடன்பிறவாச் சகோதரரை இழந்து விட்ட தாங்கவொணாத் துயரம்.



எண்பதுகளில் வேலணையில் அறிமுகமான உறவு சிறு இடைவெளியின் பின்னர் மீண்டும் கனடாவில் 1992ம் ஆண்டிலிருந்து தொடங்கியது. எமது பாடசாலை இடம் பெயர்ந்து யாழ் கந்தர்மடத்தில் இயங்கியபோது இருவரும் வீடு வீடாகச் சென்று நிதி சேகரித்துப் பாடசாலைக்கு அனுப்பிய பின்னர் 1995இல் பழைய மாணவர் சங்கத்தை உருவாக்கியவர்களில் ஒருவராகி அதன் முதலாவது செயலாளராகவும் செயற்பட்டு இறுதிவரை அதன் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட தன்னலமற்ற சமூகசேவையாளர் என்பதனைப் பெருமையுடன் கூறிக் கொள்கின் றேன். கடந்த வருடம் நீண்ட காலத்தின் பின்னர் வேலணைக்குச் சென்றபோது தான் நேசித்த பாடசாலையில் கௌரவிக்கப்பட்டதுடன் தனது குலதெய்வமான வேலணை முத்துமாரி அம்மனையும் தரிசித்து ஊரவர்களையும் தனது பாட சாலை நண்பர்களையும் சந்தித்து வந்தார்.

இறப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் ஞாயிற்றுக்கிழமை 3.00 மணியளவில் என்னைத் தொலைபேசியில் அழைத்து உங்களிடம் ஒன்று கேட்க வேண்டும் என்று ஆரம்பித்து அரைமணிக்கும் மேலாக அளவளாவினார்.

பாஸ்கரன் அண்ணா நீங்கள் கேட்க நினைத்த ஒன்று எங்களை விட்டுப் பிரிவதற்கான அனுமதியா? என்று அப்போது எனக்கு விளங்கவில்லை.



இன்று நீங்கள் எம்முடன் இல்லை என்ற போதும் நீங்கள் நேசித்த பாடசாலையும் அதன் சங்கமும் இருக்கும் வரை உங்கள் நினைவு இருந்துகொண்டே இருக்கும். திரு பாஸ்கரன் என்ற பழைய மாணவரையும் ஊர்ப்பற்றாளரையும் நினைத்து நாம் அனைவரும் பெருமை கொள்ளலாம். இவை அனைத்திற்கும் மேலாக திரு பாஸ்கரன் அவர்கள் ஒரு தலைசிறந்த பண்பாளரும் மனமுவந்து பிறருக்கு உதவும் உயரிய குணமும் உடையவர்.

அவரை இழந்து வாடும் மனைவி பிள்ளைகள், மருமகள் பேரப்பிள்ளை சகோதரர் மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல முத்துமாரி அம்மனை வேண்டுகின்றேன்

ஓம் சாந்தி!ஓம் சாந்தி!ஓம் சாந்தி!

**சி. இளஞ்செழியன்**

**பழைய மாணவன் (1975 - 1982)**

**வேலணை மத்திய கல்லூரி**

[redacted]

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு யூன் 23 முதல் யூலை 15 வரை உணவளிக்கவுள்ள கருணையாளர்களின் கவனத்திற்கு!



எமது இனிய வாசகர்களே! உங்கள் அபிமான ஈழநாடு எதிர்வரும் யூலை 07, 14 திகதிகளில் வெளிவராது. 21 யூலை 2023 வெள்ளிக்கிழமை வழமை போன்று வெளிவரும். அதேவேளை முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளின் உணவளிக்கும் செயற்பாடுகள் வழமை போன்று தவறாது நடைபெறும். (01 யூலை முதல் 21 யூலை வரையான உணவளித்தோர் விபரங்களும் ஒளிப்படங்களும் 21 யூலை 2023 வெளிவரும் என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம். தொடர்புகளுக்கு 416 841 9600

# தமிழ்ப்பிரதிநிதிகள் அடங்கிப் போகாவிடில் சிறைக்குள் இருக்க வேண்டிய நிலை ஏற்படுமென எச்சரிக்கும் சரத்வீர



தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எடுத்ததற்கெல்லாம் உணர்ச்சி வசப் பட்டுத் துள்ளிக் குதிக்காமல், அடக் கிக் வாசிக்க வேண்டும். இல்லையேல் சிறையில் தான் அவர்கள் அடைக்கப் படுவார்கள் என்று எச்சரித்துள்ளார் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீர சேகர. நாடாளுமன்றச் சிறப்புரிமை யைப் பயன்படுத்தி எதனையும் சாதிக்க லாம் என்று கஜேந்திரகுமார், சாணக் கியன் உள்ளிட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணுகின்றார்கள்.

இது அவர்களின் அறியாத்தனம் என்றே கூற வேண்டும். இதற்காக அவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைத்த தமிழ் மக்கள் வெட்கித் தலைகுனிய வேண்டும். பொலிஸாருடன் சண்டித்தனம் காட் டும் அளவுக்குத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் துணிவு வந்து ள்ளது.

இப்படியானவர்களைக் கைது செய்து அவர்களுக்குப் பிணை வழங்காமல் சிறையில்தான் தொடர்ந்து அடைத்து வைத்திருக்க வேண்டும். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாய்ச் சவடால் நாடாளுமன்றத்திலும் சரி, வெளியிலும் சரி எடுபடாது. முதலில் அவர்கள் சட்டம், ஒழுங்கு தொடர்பில் நன்றாகத் தெளிவடைந்திருந்த வேண் டும். என்றார்.


# இன்டர்போலினால் சிவப்புப் பட்டியலில் உள்ள 7 இலங்கையர்கள்

இன்டர்போல் எனப்படும் சர்வதேச பொலிஸாரால் சிவப்பு பட்டியலிடப் பட்டுள்ள நபர்களின் வரிசையில் 7 இலங்கையர்களின் பெயரும் உள்ள டக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. சர்வதேச பொலி ஸின் சிவப்பு பட்டியல் வரிசையில் மொத்தமாக 6872 பேரின் பெயர்கள் பட்டியலிடப்பட்டு ள்ளன.

இவ்வாறு தேடப்பட்டு வரும் பட்டியலில் நான்கு இலங்கையர்கள் இலங்கையில் தேடப்பட்டு வருவ தாகவும், மூன்று இலங்கையர்கள் வெளிநாடுகளில் இழைத்த குற்றச் செயல்களுக்காக அந்தந்த நாடுகளி னால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய சிவப்பு பட்டியலில் உள்ள டக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

38 வயதான கொஸ்கொட சுஜி எனப்படும் சொய்சா ஜகமுனி சுஜிவ, 49 வய தான நடராஜா சிவராஜா, 50 வயதான முனுசாமி தர்மசீலன் மற் றும் 35 வயதான விக்னராசா செல்வ நாதன், 52 வயதான குமாரசுவாமி நவனீதன், 61 வயதான மொஹமட் பௌமி, 41 வயதான மாணிக்கவாச கர் விஜயராஜா ஆகியோர் இவ்வாறு தேடப்பட்டு வருவோர் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**



# வடக்கு கிழக்கு அதிஉயர் பாதுகாப்பு வலயங்களில் மக்கள் காணிகளை விடுவிக்க விசேட அலுவலகம்



வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அதியுயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் காணப்படும் மக்கள் காணிகளை விடுவிப்பதற்காக விசேட அலுவலகமொன்றை ஸ்தாபிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான பணிகளை துரிதமாக முன்னெடுக்குமாறு பாதுபாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் சாகல ரத்நாயக்க ஆலோசனை வழங்கியுள்ளார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதி ஆலோசகர் சாகல ரத்நாயக்கவின் ஆலோசனைக்கமைய இந்த அலுவலகம் ஸ்தாபிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இராணுவத்தில் பிரிபேடியர் நிலை அதிகாரி தலைமையில் ஸ்தாபிக்கப்படவுள்ள இந்த காணி விடுவிப்பு அலுவலகமானது 6 மாதங்களுக்குள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் மக்கள் காணி பிரச்சினைக்கு நிரந்தர தீர்வினை வழங்க வேண்டும் என்றும் ஜனாதிபதி ஆலோசகர் சாகல ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார். மேலும், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையிலும், பாரம்பரியமான நில உரிமையை கொண்டுள்ள மக்களுக்கு அநீதிகள் ஏற்படாத வகையிலும் காணி பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்குடன் குறித்த அலுவலகத்தை ஸ்தாபிக்குமாறு பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், 2009ஆம் ஆண்டில் 23,850.72 ஏக்கர் மக்களின் காணிகள் பாதுகாப்புப் படைகள் வசம் காணப்பட்டது. ஆனால், நடப்பு ஆண்டு ஆகுகையில் இந்த எண்ணிக்கையில் 20,755.52 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும், 106 ஏக்கர் மக்கள் காணி கடந்த ஜனவரி மாதம் விடுவிக்கப்பட்டது. அத்துடன், 2989.80 ஏக்கர் மக்கள் காணி விடுவிப்பதற்காக அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலையில், நாட்டின் தேசிய பாதுகாப்பு குறித்து அவதானத்துக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் காணிகள் விடுவிக்கப்படவுள்ளது.


## இலங்கையில் இன மத சிறுபான்மையினரை மௌனமாக்க முயற்சி - அமெரிக்க செனட் குழு



இலங்கையில் இன மத சிறுபான்மையினரை மௌனமாக்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்து அமெரிக்க செனெட்டின் வெளிவிவகார குழு கவலை வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் செனெட் வெளிவிவகார குழுவின் உத்தியோகபூர்வ டுவிட்டரில் இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விடுதலை செய்யப்பட்டதை நான் வரவேற்க்கும் அதேவேளை அவர் கைது செய்யப்பட்டமை அச்சுறுத்தப்பட்டமை துன்புறுத்தப்பட்டமை குறித்து நான் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளேன் என செனெட் குழுவின் தலைவர் செனெட்டர் மெனெடெஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பாதுகாப்பு படையினர் புலனாய்வு பிரிவினரின் அச்சுறுத்தல்கள் துன்புறுத்தல்கள் குறித்தும் இனமத சிறுபான்மையினரை மௌனமாக்குவதற்கான நடவடிக்கைகள் குறித்தும் நான் கரிசனை கொண்டுள்ளேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு


ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

17 யூன் 2023 சனிக்கிழமை – அமாவாசை விரதம்

25 யூன் 2023 ஞாயிற்றுக்கிழமை – ஆனி உத்தரம்
உபயம்:– லோகநாதன் (பாபு) சாந்தி குடும்பம்

30 யூன் 2023 வெள்ளிக்கிழமை – பிரதோஷ விரதம்
02 யூலை 2023 ஞாயிற்றுக்கிழமை – பௌர்ணமி விரதம்
14 யூலை 2023 வெள்ளிக்கிழமை – பிரதோஷவிரதம்
16 யூலை 2023 ஞாயிற்றுக்கிழமை – அமாவாசை விரதம்
17 யூலை 2023 திங்கட்கிழமை – ஆடிப்பிறப்பு

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# கனடாவுக்கு எதிரான தீர்மானத்தைத் தயாரிக்கும் சரத்வீரசேகர



இலங்கையில் இனப்படுகொலைகள் இடம்பெற்றன என்ற கனடாவின் பிரகடனத்தை ஏனைய நாடுகளும் அங்கீகரிக்கலாம் என எச்சரித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினரும் பாதுகாப்பு தொடர்பான நாடாளுமன்ற கண்காணிப்பு குழுவின் தலைவருமான சரத் வீரசேகர கனடாவின் அரசியல் நோக்கம் கொண்ட பொய்யை எதிர் கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

08 யூன் 2023 தேசிய பார்வை தொடர்பான கண்காணிப்பு குழுவின் கூட்டத்தில் சரத் வீரசேகர இதனை தெரிவித்துள்ளார். இந்த கூட்டத்தில் முப்படையின் தலைமை அதிகாரிகள் புலனாய்வு பிரிவுகளின் பிரதான அதிகாரிகள் கலந்து கொண்டுள்ளனர். பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரும் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளார்.

இந்த கூட்டத்தில் கருத்து தெரிவித்துள்ள சரத் வீரசேகர அமைச்சரவையின் அனுமதியை பெற்ற பின்னர் இலங்கையில் இனப்படு கொலை இடம் பெற்றது என்ற கனடாவின் தீர்மானத்தினை கண்டிப்பதற்காக வெளிவிவகார அமைச்சு நாடாளுமன்றத்தில் தீர்மானமொன்றை கொண்டு வர வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார். இது தொடர்பில் தான் தனிநபர் பிரேரணையை கொண்டு வர திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

கனடாவின் நடவடிக்கைக்கு வெளிவிவகார அமைச்சர் கடும் கண்டனம் வெளியிட்டதை பாராட்டியுள்ள சரத் வீரசேகர கடந்த வருடம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் அடிப்படையிலேயே கோட்டாபய ராஜபக்ச மகிந்த ராஜபக்ச ஆகியோருக்கு எதிராக பயணத்தடைகளை விதித்தது என சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

ஆதாரங்கள் அற்ற யுத்தக் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் கனடா விதித்துள்ள பயணத்தடைக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்கா விட்டால் யுத்தத்தில் வெற்றி பெற்ற இராணுவத்தினருக்கு கடும் பாதிப்புகள் ஏற்படலாம் என தெரிவித்துள்ள சரத் வீரசேகர இனப்படுகொலை குற்றச்சாட்டுகளை சவாலுக்கு உட்படுத்தாமல் தொடர அனுமதித்தால் அது தனிநாடு குறித்த கோரிக்கைகள் நியாயப்படுத்தப்படும் நிலையை ஏற்படுத்தும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இராணுவ அதிகாரிகள் நம்பிக்கை இழப்பார்கள் எதிர்கால யுத்தங்களில் அவர்கள் ஆர்வம் காட்டுவார்கள் என எதிர்பார்க்க முடியாது எனவும் சரத்வீரசேகர தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் கூட்டங்களில் இலங்கை தவறாக கையாளப்பட்டுள்ளது எனவும் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளிடமிருந்து தப்பி இராணுவத்தினரிடம் அடைக்கலம் புகுந்தவர்கள் இனப்படு கொலை என்பது கற்பிதம் என்பதை வெளிப்படுத்தியுள்ளனர், என குறிப்பிட்டுள்ள சரத் வீரசேகர ஆதாரமற்ற யுத்த குற்றச்சாட்டுகள் குறித்து வெளிவிவகார அமைச்சு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்– எனினும் ஒட்டாவாவில் உள்ள தூதரகம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

செப்டம்பர் 11 தாக்குதலிற்கு பின்னர் நிறைவேற்றப்பட்ட ஐநா தீர்மானம் காரணமாக பாதுகாப்பு சட்டங்களில் மாற்றங்களை மேற்கொள்ள முடியாது எனவும் குறிப்பிட்டுள்ள அவர் வடக்கின் பாதுகாப்பை பணயம் வைத்து இராணுவத்தின் எண்ணிக்கையை குறைக்க கூடாது எனவும் கருத்து வெளியிட்டுள்ளார்.

# ஜனாதிபதிக்கான தகுதி?

ஐக்கிய மக்கள் குடியரசு கட்சியின் தலைவர் சம்பிக்க ரணவக்க தனக்கு ஜனாதிபதியாக வருவதற்கான தகுதியிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கின்றார். நாடு ஜனாதிபதி தேர்தலொன்றை எதிர் கொள்ளவுள்ள நிலையில் யாருக்கெல்லாம் வேட்பாளராவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்னும் கேள்வி இப்போதே எழத் தொடங்கி விட்டது.

ஜனாதிபதிக்கான போட்டி என்பது அடிப்படையில் நபர்களுக்கு இடையிலான போட்டி தான். பலமான கட்சி பின்னணி தேவைப்பட்டாலும் கூட, போட்டியிடவுள்ள தனிநபர்கள் தொடர்பான மக்கள் அபிப்பிராயம் முக்கியமானது. கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது, கோட்டாபய ராஜபக்ஷ தொடர்பில் சிங்கள மக்கள் மத்தியில் முற்றிலும் சாதகமானதோர் அபிப்பிராயம் நிலவியிருந்தது. அதற்கு பல காரணங்களும் இருந்தன.

ஒன்று, கோட்டாபயவுக்கு ஆதரவான வியத்மக அமைப்பு மத்திய தரவர்க்க மக்கள் மத்தியில் கோட்டாபய ராஜபக்ஷ தொடர்பில் சாதகமான அபிப்பிராயங்களை ஏற்படுத்தியிருந்தது. விடுதலைப்புலிகளுக்கு எதிரான போர் வெற்றியையும் இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பான ஐ. எஸ். ஐ. எஸ். அமைப்பால் முன்னெடுக்கப்பட்ட ஈஸ்டர் குண்டுத்தாக்குதலுக்கு பின்னரான சூழலையும் அவர்கள் கச்சிதமாகப் பயன்படுத்திக் கொண்டனர்.

கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றி நன்கு திட்டமிட்ட வகையில் இடம் பெற்றது. இதற்காக இரண்டு வருடங்களுக்கு முன்னரே பல்வேறு குழுக்கள் திறம்பட செயலாற்றியிருந்தன. குறிப்பாக, பௌத்த ஆலயங்கள் அனைத்திலும் குறிப்பிட்ட நேரம் இஸ்லாமிய பயங்கரவாதத்தின் ஆபத்துகள் குறித்த பிரசாரங்களுக்கு பயன்படுத்தப்பட்டன.

இவ்வாறானதொரு பின்புலத்தில் தான் கோட்டாபய ராஜபக்ஷ தனிச்சிங்கள வாக்கில் வெற்றி பெற முடிந்தது. அவர் எவ்வளவு வேகமாக செல்வாக்கின் உச்சிக்கு கொண்டு செல்லப்பட்டாரோ, அதேயளவு வேகமாகவே அறகலய என்னும் சிங்கள கிளர்ச்சியின் மூலம் வீழ்த்தவும் பட்டார்.

தற்போதுள்ள சூழல் முற்றிலும் வேறுபட்டது. சிங்கள கிளர்ச்சியின் மூலம் ஒரு ஜனாதிபதி பதவியிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கின்றார்.

அறகலய ஊடாக பதவிக்கு வந்தவரான ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஜனாதிபதியாவதற்கான திட்டங்களை வகுக்கின்றார். இந்த நிலையில், ஏனையவர்களும் குறிப்பாக சஜித் பிரேமதாஸ மற்றும் சம்பிக்க ரணவக்க போன்றவர்களும் வேட்பாளருக்கான தகுதி நிலையுடன் தங்களை அடையாளப்படுத்த முயற்சிக்கின்றனர்.

தற்போதுள்ளசூழலில், ரணில் விக்கிரமசிங்கவின் அனுபவம் மற்றும் அவருக்குள்ள சர்வதேச தொடர்புகள் மட்டுமே அவருக்கு சாதகமாக இருக்கின்றன. இதேவேளை சம்பிக்க போன்ற ஒருவரை பொது வேட்பாளராக்கி அவருக்கு ஏனையவர்கள் அனைவரும் ஆதரவு வழங்குவார்களாக இருந்தால் ரணிலின் திட்டங்கள் தோல்வியடையலாம்.

அவ்வாறானதொரு சூழல் ஏற்படுவதை எவ்வாறாயினும் தடுக்கவே ரணில் முயற்சிக்கக் கூடும். எனினும், நாடு பொருளாதார ரீதியில் குறிப்பிட்டு சொல்லக்கூடிய நிலையில் முன்னேற்றத்தை இது வரையில் பதிவுசெய்யவில்லை. டொலரின் பெறுமதி வீழ்சியடைந்திருந்தாலும் கூட, இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் போது மீண்டும் ஒரு பொருளாதார முடக்கம் ஒன்று ஏற்படலாம் என்றும் நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். இறக்குமதியை தொடர்ந்தும் சுருக்குவதன் ஊடாகவும் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது. இதனை ரணில் எவ்வாறு சமாளிக்கப் போகின்றார் என்பதில் தான் அவர் மீதான அபிப்பிராயம் தங்கியிருக்கின்றது.

ஆனால், வேறு எவரும் நாட்டை முன்னெடுப்பதற்கு இல்லாத நிலையில் தான் ரணில் நாட்டை முன் கொண்டு செல்லும் பணியை பொறுப்பேறார். எனினும், பொறுப்பை ஏற்றுக் கொண்டவர் அதனை தொடர்ந்தும் மக்களுக்கு சாதகமாகக் கொண்டு சென்றால் மட்டும் தான் ரணிலால் வெற்றியை அறுவடை செய்ய முடியும்.

# தமிழர்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள்
## வழங்குவது குறித்து தீர்மானங்கள் எதுவுமில்லை - நீதிஅமைச்சர்



வடமாகாணசபைக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது குறித்து அரசாங்கம் எந்தவொரு தீர்மானமும் எடுக்கவில்லை எனவும் அது தொடர்பில் உள்ளக கலந்துரையாடல்கள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை எனவும் நீதி, சிறைச்சாலை அலுவல்கள், அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வடமாகாண சபைக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கடந்த வாரம் சிங்கள பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

அத்துடன் இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினைகளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிடம் கொண்டு செல்வதில்லை என அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகவும் அப் பத்திரிகையில் செய்தியொன்று வெளியாகியிருந்தது.

இதன் உண்மைத் தன்மை குறித்து இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தில் இயங்கிவரும் Factseeker அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவிடம் வினவிய போதே அவர் அத்தகைய தீர்மானங்கள் எவையும் மேற் கொள்ளப்படவில்லை என உறுதிப்படுத்தியுள்ளார்.

வட, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ்மக்களுக்கான அரசியல் தீர்வு உள்ளிட்ட நீண்டகாலப் பிரச்சினைகளுக்கான தீர்வினை வழங்குவது குறித்து அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கரமசிங்க தமிழ் அரசியல் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்திருந்த நிலையிலேயே இவ்வாறானதொரு செய்தி வெளியாகியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

இதேவேளை இன நல்லிணக்கம் தொடர்பில் ஒருபுறம் கதைத்து விட்டு பிறிதொரு புறம் தமிழ் பிரநிதிக்கு எதிராக செயற்படும் போது தமிழ் மக்கள் எவ்வாறு சட்டம், ஒழுங்கு மீது நம்பிக்கை கொள்வார்கள்? என்று தேசிய மக்கள் சக்தியின் எம்.பி.யான ஹரிணி அமரசூரிய கேள்வியெழுப்பினார்.

பாராளுமன்றத்தில் கடந்த 08 யூன் 2023 வியாழக்கிழமை இடம் பெற்ற நிதி,பொருளாதார உறுதிப் படுத்துகை மற்றும் தேசிய கொள்கைகள் ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே மேற்கண்ட கேள்வியை அவர் எழுப்பினார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி விவகாரம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால் அவர் கைது செய்யப்பட்ட விதம் முற்றிலும் தவறானது. இதன் மூலம் அரசாங்கம் தமிழ் மக்களுக்கு வழங்கும் செய்தி என்ன? இன நல்லிணக்கம் தொடர்பில் ஒரு புறம் கதைத்து விட்டு பிறிதொரு புறம் தமிழ் பிரநிதிக்கு எதிராக செயற்படும் போது தமிழ் மக்கள் எவ்வாறு சட்டம், ஒழுங்கு மீது நம்பிக்கை கொள்வார்கள்?

குற்றமிழைப்பவர்களை சமமாக நடத்த வேண்டும். பாராளுமன்றத்தில் இந்த வித்தியாசத்தை அவதானித்தோம். ஆளும் தரப்புக்கு ஒரு சலுகை எதிர்க்கட்சிக்கு பிறிதொரு சலுகை அரசாங்கம் மனம் போன போக்கில் செயற்படுகிறது என்றார்.

# வேலணை மண்ணின் மைந்தன் பாஸ்கரன் அவர்களுக்கு 31ம்நாள் கண்ணீர் அஞ்சலி



வேலணையைப் பிறப்பிடமாகவும்
கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த

**திரு பாஸ்கரன் கனகரட்ணம்**

வேலணை மண்ணின் மைந்தனும் வேலணை மத்திய கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் கனடாவின் வரலாற்று நாயகனாகக் கருதப்பட்டவருமாகிய கனகரட்ணம் பாஸ்கரன் கடந்த 16-05-2023 செவ்வாய்க்கிழமை கனடாவில் இறையடி சேர்ந்தார் என்ற செய்தியறிந்து அதிர்ச்சியடைந்தோம். சிறு வயதிலிருந்தே நண்பர்களாக உலா வந்த காலம் தொட்டு இறுதி வரை எம் நட்பு வட்டம் நீடித்தது மாத்திரமன்றி அமைதியாய் நண்பர்கள் மனதிற்கினிய சகாவாய் எல்லோருடனும் பழகுவதற்கு எளிமையானவனாய் எம்மத்தியில் உலா வந்தீர். இறுதியாக சென்ற ஆண்டு கனடாவில் இருந்து ஊருக்கு வந்து நீண்ட இடைவெளிக்குப்பின் நட்பு வட்டத்தி லுள்ளவர்களுடன் அன்பை வெளிப் படுத்தி நெருக்கமான உறவைப் பேணினீர். அத்துடன் மட்டுமன்றி இந்த வருடம் ஆவணியில் பெருங்குளம் திருவிழாவிற்கு ஊருக்கு வருவேனென உறுதியாகக் கூறினீர். இன்று . . .

**வேலணை மண்ணின் மைந்தனே**
**வேலணை மத்திய கல்லூரித் தாயின் மகவே**
**கனகரட்ணத்தின் குலக்கொழுந்தே**
**கனடா பழைய மாணவர் சங்க நாயகனே**
**நட்புக்கு இலக்கணமே நல்லவனே நம் பாஸ்கரனே**
**பழகுவதற்கு இனியவனே பண்பாடு பேணுபவனே**
**நாட்டுப் பற்றாளனே! நம் நண்பனே**
**நமை மறந்து விண்ணுலகம் சென்றதேனோ?**

கொழும்பு பழைய மாணவர் சங்கத்தில் உனது நண்பர்கள் பலர் உனது இழப்பை அறிந்து ஆழ்ந்த வேதனையை வெளிப்படுத்தி நிற்கின்றனர்.

ஆறாத் துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் மனைவி மகன் மகள் மருமகள் பேத்தி மற்றும் அனைத்துக் குடும்ப உறவுகளுக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரி விப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக!!

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!**

**வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்**
**கொழும்புக் கிளை சார்பாக கோ. பரமானந்தன்**

# அரசாங்கம் பேச்சுவார்த்தையை இழுத்தடிப்புச் செய்து தீர்வை நீர்த்துப் போகச் செய்தால் வெளியக சுயநிர்ணம் கோரும் நிலை ஏற்படுமென சம்பந்தர் எச்சரிக்கை

தமிழ் மக்கள் உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் தமது அபிலாஷைகளை பூர்த்தி செய்துகொள்வதையே விரும்பு கின்ற நிலையில், இழுத்தடிப்புக்கள் மூலமான தீர்வினை நீர்த்துப் போகச் செய்வதற்கு முயன்றால் வெளியக சுய நிர்ணயத்தைக் கோரும் நிலைமை ஏற்படும் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவரும், திரு கோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரி வித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலை மையிலான அரசாங்கத்துடன் கடந்த வியாழக்கிழமை நடத்திய பேச்சுவார் த்தை அதோடிணைந்த எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரி விக்கையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான நாம் பேச்சுவார்த்தை யில் முழுமையான திருப்தியைக் காண வில்லை. இருப்பினும் அவர்களின் கூற்றுப்படி எடுக்கப்படும் முயற்சிகளு க்கு நாம் ஒத்துழைப்புக்களை வழங்கு வதற்கு தயாராகவே உள்ளோம்.

இருப்பினும், அரசியல் தீர்வுக்கான நடவடிக்கைளை கடந்த பெப்ரவரி நான்காம் திகதிக்கு முன்னதாக ஜனாதி பதி முன்னெடுப்பதாக கூறியிருந்தார். எனினும் அது தொடர்பில் இன்னமும் ஆக்கபூர்வமான கருமங்கள் முன்னெடு க்கப்படவில்லை.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் தமது அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்காக நீண்டகாலமாக போராடி வருகின்றார்கள். அவர்கள் வடக்கு கிழக்கில் சரித்திரபூர்வமாக வாழ்ந்து வருபவர்கள். ஆகவே அவர்கள்



சுயநிர்ணய உரித்தினைக் கொண்டுள் ளார்கள். அவர்கள் தங்களைத் தாங்களே ஆளுகின்ற வகையில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்று வலியுறுத்து கின்றார்கள். அதன் பிரகாரம் அரசாங்கம் பிரிக்க முடியாத, பிளவுபடுத்தப்படாத ஐக்கிய இலங்கைக்குள் உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் நியாயமான, நிரந்தரமான அரசியல் தீர்வொன்றை வழங்க வேண்டும். இந்த விடயத்தில் அரசாங்கம் தொடர்ச்சியாக காலத்தினை இழுத்தடித்துச் செல்ல முடியாது. இவ் வாறான நிலைமை தொடர்வதன் ஊடாக தேசிய இனப்பிரச்சினை விவகாரத்தினை நீர்த்துப் போகச் செய்ய முடியும் என்று கருதலாம். ஆனால், தமிழ் மக்களுக்கான உள்ளக சுயநிர்ணய உரிமை மறுக்கப் படும் பட்சத்தில் வெளியக சுயநிர்ணய உரிமையைக் கோருவதற்கான நிலை மையே ஏற்படும்.இதற்கான, ஏற்பாடுகள் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச சட்டங்களில் தெளிவாக குறிப்பிடப்பட்டு ள்ளது.

ஆகவே அவ்விதமானதொரு சூழல் ஏற்படுவதற்கு அரசாங்கம் இடமளிக் காது கருமங்களை விரைந்து முன்னெ டுக்க வேண்டும். அரசியல் தீர்வு சம்பந்த மான விடயம் அரசாங்கத்தின் கைகளில் தான் உள்ளது. ஆகவே அரசாங்கம் இதய சுத்தியுடன் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண் டியது அவசியமாகும். அந்தச் செயற் பாட்டிலிருந்து விலகி நிற்கமுயாது என்றார்.

## மிசிசாகா இந்து மகாசபையின் புதிய நிர்வாகத் தெரிவு

**மிசிசாகா இந்து மகாசபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கடந்த 04 யூன் 2023 அன்று நடைபெற்ற போது மேற்படி அறங்காவலர்கள் பொதுச்சபையினரால் ஏகமன தாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் சிவா சிவநாதன் உப தலைவர் சிவா சின்னத்தம்பி**

**செயலாளர் வேல்நாதன் சபாரத்தினம், உப செயலாளர் இராமகிருஷ்ணர் கந்தசாமி**

**பொருளாளர் சிறிஸ்கந்தன் பரமநாதன்**

**இயக்குநர்களாக மோகன் இராஜரட்ணம், கதாதரன் முருகமூர்த்தி, சிவதாசன் சுப்பிரமணியம், வரதராஜன் சிவகுரு ஆகியோர் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத் தக்கது**

# புளொட்டின் இராணுவப் பிரிவு பொறுப்பாளர் நெடுமாறனுக்கு வவுனியா மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது

வவுனியா பொது வைத்தியசாலை மகப்பேற்றுவியல் நிபுணர் வைத்திய கலாநிதி முகமட் சுல்தான் மீரா முகைதீன், வவுனியா தனியார் வைத்தியசாலை வெளி வாசலில் வைத்து 20.04.2009 அன்று சுட்டுக் கொல்லப் பட்ட வழக்கில் புளொட் இயக்கப் பொறுப்பாளர் நெடு மாறன் என அழைக்கப்படும் சிவநாதன் பிரேம்நாத் என்ற எதிரியை கொலை குற்றவாளி என தீர்ப்பளித்த வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், அவருக்கு 07 யூன் 2023 புதன்கிழமை மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

வவுனியா தனியார் வைத்தியசாலை உரிமையாளரான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்திய கலா நிதி சிவமோகன் தனது சாட்சியத்தில், கொலை செய் யப்பட்ட மகப்பேற்றுவியல் நிபுணர் தனது வைத்திய சாலையில் மாலை நேர கடமையை புரிந்து விட்டு 6.30 மணியளவில் புறப்பட்ட போது வெளிவாசலில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டதாக சாட்சிய மளித்தார்.

சம்பவ இடத்தில் கைத்துப்பாக்கியின் வெற்று தோட்டக்கள் நான்கு கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் புலனாய்வு அதிகாரி சாட்சியம் அளித்தார். எதிரியான புளொட் பிரதேச இராணுவ பொறுப்பாளர் நெடுமாறனை கைத் துப்பாக்கியுடன் கைது செய்ததாக இராணுவ உத்தியோகத்தர் நீதிமன்றில் சாட்சியமளித்துள்ளார்.

நெடுமாறனிடம் இருந்து கைப்பற்றப்பட்ட கைத் துப்பாக்கியால் தான் வைத்திய கலாநிதி சுட்டுக் கொல் லப்பட்ட இடத்தில் இருந்து கைப்பற்றப்பட்ட நான்கு வெற்று தோட்டாக்கள் சுடப்பட்டுள்ளதாகவும், அவை ஒத்து செல்வதாகவும் இரசாயன பகுப்பாளர் மடவள நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்து சாட்சியமளித்து ள்ளார்.

அத்துடன் இது துப்பாக்கிச் சூட்டு காயங்களால் ஏற்படுத்தப்பட்ட மரணம் என பிரேத பரிசோதனை செய்த வைத்திய கலாநிதி சாட்சியம் அளித்துள்ளார்.

எனினும் எதிரி, எதிரிக் கூண்டில் நின்று, தான் புளொட் இயக்க பிரதேச அரசியல் பொறுப்பாளர் எனவும், தனக்கு துப்பாக்கி தரப்படுவதில்லை என்றும் வாக்கு மூலம் அளித்ததை நம்பகத்தன்மை அற்ற வாக்கு மூலம் என நீதிபதி நிராகரித்து எதிரியை கொலை குற்றவாளி என தீர்ப்பளித்து மரண தண்டனை விதித்துள்ளார். மேலும் அவர் கண்டி போகம்பறை சிறைச்சாலைக்கு எதிரி அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

# சிங்கப்பூரில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் யாழ்ப்பாணத் தமிழர்!



சிங்கப்பூரில் எதிர்வரும் செப்டம்பர் மாதம் இடம்பெற வுள்ள ஜனாதிபதி தேர்தலில் யாழ்ப்பாணத்தை பூ ர்வீகமாகக் கொண்ட சிங்கப்பூர் மூத்த அமைச்சர் தர்மன் சண்முகரத்தினம் களம் இறங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மூத்த அமைச்சர் தர்மன் சண்முகரத்தினம் யாழ்ப் பாணம் ஊரெழு மற்றும் உரும்பிராய்ப் பகுதியை தாய் தந்தையரின் பிறப்பிடமாகக் கொண்டவராவார்.

இவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக மக்கள் செயல் கட்சியில் இருந்து பதவி விலகல் செய்வதுடன் தனது அமைச்சர் பதவியிலிருந்தும் விலகவுள்ளார்.

அத்தோடு அவர் சிங்கப்பூர் நாணய ஆணையத்தின் (MAS) GIC இன் துணைத் தலைவர், பொருளாதார மேம்பாட்டு வாரியத்தின் சர்வதேச ஆலோசனைக் குழுவின் தலைவர் மற்றும் அமைச்சர் பதவியில் அவர் ஆற்றி வரும் பிற பொறுப்புகளில் இருந்து விலகுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# கஜேந்திரகுமாரின் கைது அரசியல் தீர்வை வலியுறுத்தும் தமிழ்மக்கள் மீதான அரச ஒடுக்குமுறை- அ.காங்கிரஸ் விசனம்







அரசியல் தீர்வையும், பொறுப்புக் கூறலையும் வலியுறுத்தும் தமிழ் மக்களின் கோரிக்கைகளை ஜனநாய கத்துக்கு விரோதமான முறையில் ஒடுக்கும் இலங்கை அரசின் செயற் பாடுகளுக்கான மற்றுமொரு உதார ணமாக கஜேந்திரகுமார் பொன்னம் பலத்தின் கைது அமைந்திருப்ப தாக அமெரிக்க காங்கிரஸ் உறுப் பினர்கள் விசனம் வெளியிட்டுள்ள னர்.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி யின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கடந்த புதன் கிழமை கைது செய்யப்பட்ட சம்ப வம் தொடர்பில் கண்டனத்தையும், விசனத்தையும் வெளிப்படுத்தி தமது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவுகளி லேயே அமெரிக்க காங்கிரஸ் உறுப் பினர்கள் மேற்கண்டவாறு தெரிவித் துள்ளனர்.

### டெபோரா ரோஸ்

இச்சம்பவம் தொடர்பில் டுவிட்டர் பதிவொன்றை செய்துள்ள அமெ ரிக்க காங்கிரஸ் உறுப்பினர் டெபோரா ரோஸ், அமைதியான முறையில் போராட்டமொன்றில் ஈடுபட்டமைக்காக தமிழ் அரசியல் தலைவரும் சிவில் உரிமைகள் செயற்பாட்டாளருமான கஜேந்திர குமார் கைது செய்யப்பட்டமை மிகுந்த விசனமளிப்பதாகத் தெரிவித் துள்ளார். அத்தோடு அவர் விடுவிக் கப்பட்டிருப்பது மகிழ்ச்சியளித்தா லும், அவரது கைது கரிசனைக் குரிய விடயமாகவே காணப்படுவ தாகவும் டெபோரா ரோஸ் சுட்டிக் காட்டியுள்ளார்.

### விலி நிக்கல்

ஈடுபட்டமைக்காக தமிழ் அரசியல் தலைவரும் சிவில் உரிமைகள் செயற்பாட்டாளருமான கஜேந்திர குமார் கைது செய்யப்பட்டமை தீவிர கரிசனையைத் தோற்றுவித் துள்ளது. இந்நிலைவரம் குறித்து நான் தொடர்ந்து உன்னிப்பாகக் கண்காணிப்பேன்' என்று காங்கிரஸ் உறுப்பினர் விலி நிக்கல் பதிவிட்டு ள்ளார்.

### சம்மர்லீ

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விடுவிக்கப்பட்டமையை வரவேற்ப தாகத் தெரிவித்துள்ள காங்கிரஸ் உறுப்பினர் சம்மர் லீ, 'கஜேந்திர குமார் கைது செய்யப்பட்டமை மிகுந்த விசனத்தைத் தோற்றுவித் துள்ளது. அரசியல் தீர்வையும், பொறுப்புக்கூறலையும் வலியுறுத் தும் தமிழ் மக்களின் கோரிக்கை களை ஜனநாயகத்துக்கு விரோத மான முறையில் ஒடுக்கும் இல ங்கை அரசின் செயற்பாடுகளுக்கான மற்றுமொரு உதாரணமாக இச் சம்பவம் அமைந்துள்ளது' என்று குறிப்பிட்டுள்ளார்.

# விக்கினேஸ்வரன் அரசியலில் தொடர்வது தமிழ்மக்களுக்கு சாபக்கேடு!



விக்னேஸ்வரன் அரசியலில் தொடர்வது தமிழ் மக்களு க்கு ஒரு சாபக்கேடு என்று தான், நான் அவருடன் பயணிப்பதை நிறுத்தி கொண்டேன்' என முன்னாள் வடமாகாண விவசாய அமைச்சர் பொன்.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

விக்னேஸ்வரன் வட மாகாண முதலமைச்சராக பதவி யேற்ற போது பலரது எதிர்ப்புகளுக்கு மத்தியில் நான் அவரை வரவேற்றேன். அப்போது அவரிடம் ஒரு ஜன வசியம் இருந்தது. ஆனால் இன்று அவர் அத்தனை பிற்போக்குதனங்களும் கொண்ட ஒருவராக இருக் கிறார். ஆரம்பத்தில் நான் அதை உணரவில்லை என்றாலும் பின்னர் உணர்ந்து கொண்டேன்.

அதிலொன்று தான் விக்னேஸ்வரனின் மின்னஞ்சல் விவகாரம். 2020 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தல் வரப் போகின்றது என்ற சந்தர்ப்பத்தில் 2019 ஆம் ஆண்டளவில் இந்த சம்பவம் நடந்தது.

அதிலிருந்து தெரிந்து கொண்டேன் விக்னேஸ்வரன் பிற்போக்குதனமான எண்ணம் கொண்டவர். அவர் ஒரு மக்கள் பிரதிநிதியாக இருக்கும் போது அவர் இன நலன்களை பேணும் வகையில் செயற்பட வேண் டுமே தவிர சுயநலன் கருதி பேசக்கூடாது. எனவே விக்னேஸ்வரன் ஐயா அரசியலில் தொடர்வது தமிழ் மக்களுக்கு ஒரு சாபக்கேடு என்று.நான் அவருடன் பயணிப்பதை நிறுத்தி கொண்டேன் என தெரிவித்து ள்ளார்.

# எம் இனிய வாசகர்களின் கவனத்திற்கு!

எமது இனிய வாசகர்களே! உங்கள் அபிமான ஈழநாடு எதிர்வரும் யூலை 07, 14 திகதிகளில் வெளிவராது. 21 யூலை 2023 வெள்ளிக்கிழமை வழமை போன்று வெளிவரும். அதேவேளை முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளின் உணவளிக்கும் செயற்பாடுகள் வழமை போன்று தவறாது நடைபெறும். (01 யூலை முதல் 21 யூலை வரையான உணவளித்தோர் விபரங்களும் ஒளிப்படங்களும் 21 யூலை 2023 வெளிவரும் என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம். தொடர்புகளுக்கு 416 841 9600

# வெட்கப்பட வேண்டிய நிலையில் யாழ்.மாவட்ட கல்வி நிலை!



யாழ். மாவட்டத்தின் தற்போதைய கல்வி நிலை குறித்து வெட்கமாக உள்ளதாக யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் கல்வி வலய சங்காணை மேற்கு பிரதேசத்திலே சிறுவர் துஸ்பிரயோகத்தை தடுத்தல் என்ற தொனிப் பொருளில் விழிப்புணர்வு நடைபவனியும், விழிப்புணர்வு பொதுக்கூட்டமும் வேர்ல்ட் விசன் தொண்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்றது.

அந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இது குறித்து மேலும் உரையாற்றுகையில், கல்வியில் முதலிடத்திலிருந்த மாவட்டம் தற்போது இரண்டாம் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இதன் பின்னணி என்ன?

மேலும் பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்குமான இடைவெளி அதிகரித்து விட்டது. பிள்ளை தனது பிரச்சினைகள் குறித்து பெற்றோரிடம் உரையாடுவதற்கான சந்தர்ப்பங்களும் வழங்கப்படுவதில்லை.

இதனாலேயே பிள்ளைகள் தவறான வழிநடத்தலின் கீழ் சென்று இவ்வாறு தவறான வழியில் பயணிக்கின்றனர். இது குறித்து பெற்றோர்கள் அதீத கவனம் எடுக்க வேண்டும். ஆசிரியர்களும் மாணவர்களின் நலத்தில் அக்கறை எடுக்க வேண்டும்.

சிறுவர் துஸ்பிரயோகம் எமது மாவட்டத்தில் சிறுவர் துஸ்பிரயோகம் மாத்திரமின்றி சட்ட விரோத போதைப் பொருள் பாவனை சார்ந்த முறைப்பாடுகளும் நீதிமன்ற வழக்குகளில் அவதானிக்க கூடியதாக உள்ளது.

இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் குறித்து தீவிர நடவடிக்கை எடுக்குமாறு காவல்துறை அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளேன். அனைவரும் இது குறித்த விடயங்களில் அவதானமாக செயற்படுங்கள். எமது மாவட்டத்தில் சிறுவர் துஸ்பிரயோகத்தை தடுக்க வேண்டியது எமது கடமையாகும்.

கடந்த 4 மாதங்களுக்கு மேலாக இந்த மாவட்டத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அபிவிருத்தி சார் நடவடிக்கைகள், சமூகம்சார் பிரச்சினைகள் சம்பந்தமாக தொடர்ச்சியான ஆய்வுகளை மேற்கொண்டபடியே இருக்கின்றேன்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் பல கலந்துரையாடல்களையும் சமூக பிரச்சினைகளைத் தடுப்பதற்கான தந்திரோபாய நடவடிக்கைகளையும் மேற்கொண்டு அதில் ஓரளவு வெற்றியும் கண்டிருக்கின்றோம். எங்களுடைய மாவட்டத்தில் சிறுவர் துஸ்பிரயோகம் என்பது அதிகரித்த தொன்றாகவும் எதிர்காலத்தை பாதிக்கக் கூடிய பிரச்சினையாகவும் காணப்படும் அதேவேளை அதனை அலட்சியப்படுத்திக் கொண்டு இருக்கின்றோம்' எனவும் தெரிவித்தார்.

## ஜனாதிபதி மாளிகை, செயலகம், அலரிமாளிகை ஸ்ரீ ஜயவர்த்தனபுரவுக்கு மாற்றத் தீர்மானம்!

இலங்கையின் ஜனாதிபதி மாளிகை, செயலகம் மற்றும் பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரிமாளிகையை கொழும்பின் புறநகரான ஸ்ரீ ஜயவர்தனபுரவுக்கு மாற்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து தற்போதைய ஜனாதிபதி மாளிகை, செயலகம், பிரதமரின் அலரிமாளிகை மற்றும் பிரதமர் அலுவலகம் என்பன சுற்றுலா தளங்களாக பராமரிக்கப்படவுள்ளன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பேரில் சிறிஜயவர்தனபுர கோட்டே பிரதேசத்தில் ஒரே இடத்தில் நிர்வாக வளாகத்தை அமைப்பதற்கு மாற்று காணியை தேடி வருவதாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் பிரசாத் ரணவீரவை கோடிட்டு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இடம் அடையாளம் காணப்பட்டதன் பின்னர், கட்டிடங்களை கட்டம் கட்டமாக மாற்றுவதற்கான திட்டங்களை வரையப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உத்தேச 'புதிய கொழும்பு பாரம்பரிய நகரத் திட்டத்தின்' கீழ், இந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்த திட்டத்தின் கீழ், கொழும்பு நகரில் உள்ள ஏனைய கட்டிடங்கள் முதலீட்டாளர்களுக்கு குத்தகைக்கு மீண்டும் வழங்கப்பட உள்ளன. அதன்படி, பொது அஞ்சல் நிலையம், வெளிவிவகார அமைச்சு கட்டிடம், காவல்துறை தலைமையகம், விமானப்படை தலைமையகம், கடற்படை தலைமையகம், விசும்பய, ஷ்ரவஸ்தி (நாடாளுமன்ற உறுப்பினர்களின் முன்னாள் விடுதி), கஃபூ ர் கட்டிடம், ஜாவத்தை வீதியிலுள்ள நீர்ப்பாசன திணைக்கள கட்டிடம், வெலிக்கடை சிறைச்சாலைகள் மற்றும் காலி முகத்திடலில் உள்ள பழைய பாதுகாப்பு அமைச்சு கட்டிடம் குத்தகைக்கு வழங்கப்படுவதற்காக அடையாளம் காணப்பட்டுள்ளன.

எனினும் இந்த குத்தகையின் போது முதலீட்டாளர்கள் அசல் கட்டிட அமைப்பை தொடர்ந்தும் பேண வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்படும்.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# "நீங்கள் எனக்கு வரலாறு கற்பிக்க முயற்சிக்கின்றீர்களா?"

## தொல்பொருள் திணைக்கள அதிகாரியிடம் கடும்தொனியில் கேள்வி எழுப்பிய ரணில்!

## பணிப்பாளர் பதவியை திடீரென ராஜினாமாச் செய்தார் அனுரமனதுங்க!

வரலாற்று முக்கியத்துவம் மிக்க விகாரைகள் உள்ளிட்டவற்றை பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். அதற்காக பொது மக்களின் காணிகளை ஆக்கிரமிப்பதற்கு இடமளிக்க முடியாது. தேசிய கொள்கைகளை தொல்பொருள் திணைக்களம் பின்பற்ற வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கடந்த வாரம் ஜனாதிபதி செயலகத்தில் காணி பிரச்சினைகளை தீர்ப்பதற்கான பொறிமுறைகள் தொடர்பில் விசேட கலந்துரையாடலொன்று இடம் பெற்றது. இக்கலந்துரையாடலில் வடக்கு தமிழ் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர். இதன் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அத்தோடு தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் வரலாற்றை முழுமையாக அறிந்து கொள்ளாமல் செயற்படுவதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீங்கள் எனக்கு வரலாறு கற்பிக்க முயற்சிக்கிறீர்களா? அல்லது நான் உங்களுக்கு வரலாற்று கற்பிக்க வேண்டுமென விரும்புகிறீர்களா? என்று அதிகாரிடம் கடுந்தொனியில் கேள்வியெழுப்பியுள்ளார்.

இதன் போது முல்லைத்தீவு மாவட்டத்தில் தொல்பொருள் திணைக்களத்தின் கீழ் காணப்படும் 229 ஏக்கர் காணியை விடுப்பதற்கான கடிதத்தை ஜீன் 31ஆம் திகதிக்கு முன்னர் வழங்குவதாக தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் உறுதியளித்திருந்தார்.

எனினும் இதுவரையில் அதற்கான பதில் வழங்கப்படவில்லை என வடக்கு பிரதிநிதிகளால் ஜனாதிபதியிடம் தெரிவிக்கப்பட்டது. இதற்கு பதிலளித்த பணிப்பாளர் நாயகம் , 'எனக்கு அதனை விடுவிப்பதில் பாரிய சிக்கல் காணப்படுகிறது.' எனக் குறிப்பிட்டார்.

எனினும் அது அமைச்சரவையின் கொள்கை என்றும், அதனை தொல்பொருள் திணைக்களம் பின்பற்ற வேண்டும் என்றும் ஜனாதிபதி கடுந்தொனியில் தெரிவித்ததோடு, அடுத்த முறை இவ்வாறு தேசிய கொள்கையை பின்பற்றாமைக்கு காரணங்களை முன்வைத்துக் கொண்டிருக்கக் கூடாது என்றும் ஜனாதிபதி எச்சரித்தார்.



விகாரையொன்றை அமைப்பதற்கு 275 ஏக்கர் நிலப்பரப்பை எடுத்தால் அது மகா விகாரையை விடவும் பெரியதாகிவிடும். மகா விகாரை, தியதவனாராமய மற்றும் அபயகிரி உள்ளிட்ட அனைத்து விகாரைகளை இணைத்தால் 100 ஏக்கர் காணப்படும்.

அவ்வாறெனில் இவற்றை விட பாரிய விகாரையை அமைப்பதற்காகவா நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்? நீங்கள் எனக்கு வரலாறு கற்பிக்க முயற்சிக்கிறீர்களா? அல்லது நான் உங்களுக்கு வரலாற்று கற்பிக்க வேண்டுமென விரும்புகிறீர்களா? என்று ஜனாதிபதி அதிகாரிகளிடம் கேள்வியெழுப்பினார்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். அதற்காக ஒரு விகாரைக்கு 220 ஏக்கர் நிலப்பரப்பு உரித்துடையதாகக் காணப்படும் என்று நான் நினைக்கவில்லை. விடயத்துக்கு பொறுப்பான அமைச்சருடன் கலந்துரையாடி இது தொடர்பில் தீர்க்கமான முடிவொன்று எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பொது மக்களின் 3000 ஏக்கர் காணியை கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னர் தொல்பொருள் திணைக்களம் ஆக்கிரமித்துள்ளது. பனாமுரே திலகவன்ச என்ற தேரரே தற்போது அந்த காணியை ஆக்கிரமித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் இதன் போது சுட்டிக்காட்டினார். கடந்த காலங்களில் நியமிக்கப்பட்டிருந்த கிழக்கு தொல்பொருள் பாதுகாப்பு செயலணியின் உறுப்பினராக அந்த தேரர் செயற்பட்டதாக அதிகாரிகள் இதன் போது தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி அந்த செயலணி தற்போது செயற்பாட்டில் இல்லையல்லவா? அத்தோடு அந்த செயலணிக்கு அரசாங்கத்தின் காணியையோ அல்லது தனியாரின் காணியையோ ஆக்கிரமிக்க முடியாது. இதில் என்ன சட்ட முறைமை காணப்படுகிறது? வனப்பகுதிகள் உங்களுக்கு உரித்தானதில்லையல்லவா?

திரியாயவுக்கு எதற்காக 3000 ஏக்கர் காணி தேவைப்படுகிறது? திரியாய என்பது விகாரையல்ல. முன்னயை காலங்களில் அது துறைமுக மையமாகும். படகின் மூலம் திரியாயவிலிருந்து ஹொரவபொத்தான வரை செல்ல முடியும். பின் ஹொரவபொத்தானையிலிருந்து அநுராதபுரத்துக்கும், அங்கிருந்து மல்வத்து ஓயாவுக்கும் அங்கிருந்து மன்னாருக்கும் செல்ல முடியும்.

அந்தப் பகுதியில் வரலாற்று சிறப்புமிக்க இந்து கோவிலொன்றும் காணப்பட்டது. எனவே அங்கு தேரர்களால் வைக்கப்பட்டுள்ள கற்களை உடனடியாக நீக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி இதன் போது பணிப்புரை விடுத்தார்.

இது இவ்வாறிருக்க தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அனுர மனதுங்க அந்தப் பதவியிலிருந்து இராஜினாமா செய்துள்ளார்.

இந்த இரஜினாமா கடிதத்தை அவர் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பியுள்ளதாக புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார். வடக்கு, கிழக்கில் காணிகளை பறித்து விகாரைகளை அமைக்கும் செயற்திட்டத்தை தொல்பொருள் திணைக்களம் இடைநிறுத்த மறுப்பது பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. வடக்கு, கிழக்கில் தமிழர்களின் காணிகள் சுவீகரிக்கப்படுவதை நிறுத்துமாறும், பௌத்த விகாரைகளைக்



கட்டும் பணிகளை இடை நிறுத்துமாறும் ஜனாதிபதி உத்தர விட்டிருந்தார். இருப்பினும் தொல்பொருள் திணைக் களம் தமது செயற்பாடுகளை இன்னமும் நிறுத்திக் கொள்ளாத நிலையில் அவர் இராஜினாமா செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

முன்னாள் பணிப்பாளர் நாயகம் கலாநிதி செனரத் திஸாநாயக்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றதை அடுத்து, தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக 2021 ஜனவரி முதலாம் திகதி முதல் பேராசிரியர் மனதுக நியமிக்கப்பட்டார்.

பேராசிரியர் மனதுங்க முன்னர் களனிப் பல்கலைக்கழகத்தின் பாரம்பரிய கற்கைகளுக்கான நிலையத்தில் பணிப்பாளராக கடமையாற்றியுள்ளார். அத்தோடு தொல்பொருளியலுடன் தொடர்புடைய பல முக்கிய திட்டங்களிலும் அவர் பணியாற்றியுள்ளார்.

# பாலியல் குற்றச்சாட்டில் லண்டனில் கைதான சரவணபவ சாமியாருக்கு

## பிணை வழங்க நீதிமன்றம் மறுப்பு! குற்றச்சாட்டுக்களை மறுக்கும் அறக்கட்டளை!

பாலியல் குற்றச்சாட்டுக்களின் பெயரில் கடந்த 09.06.2023 அன்று பிரித்தானிய காவல்துறையினரால் கைது செய்யப்பட்ட முரளிக்கிருஷ்ணா என்ற சாமியார் 12 யூன் 2023 நீதிமன்றில் முன்நிலைப்படுத்தப்பட்ட நிலையில், அவர் கோரியிருந்த பிணை மறுக்கப் பட்டு மீண்டும் காவல்துறையினரின் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்கப்பட்டு வருகின்றார்.

குறிப்பிட்ட சாமியாரை பிணை எடுப்பதற்காக பலமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், பிரித்தானியாவில் பாலியல் ரீதியிலான குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளானவர்களுக்கு பிணை வழங்குவதில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற கடுமையான நடைமுறைகள் காரணமாக அவருக்குப் பிணை வழங்கப்படவில்லை என்று தெரிய வருகின்றது.

அடுத்த மாதம் அவர் குற்றவியல் நீதிமன்றில் (Crown Court) முன்னிலைப்படுத்தப்படும் வரை காவல்துறையினரின் தடுப்புக்காவலில் வைக்கப்படுவார் என்றும் கூறப்படுகின்றது. வருகின்ற ஆவணி மாதத்தின் பிற்பகுதி அல்லது ஐப்பசி மாதத்தின் முற்பகுதியில் நீதிமன்ற விசாரணைகள் தொடரும் என்றும் கூறப்படுகின்றது. அது வரை குற்றம் சாட்டப்பட்ட முரளிகிருஷ்ணா தொடர்ந்து தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு இருப்பார் என்பதுடன், அவர் பிணையில் வந்தால் சாட்சிகளை குலைக்கச் சந்தர்ப்பம் இருக்கின்ற காரணத்தால் அவருக்கு பிணை வழங்கப்படவில்லை என்றும் இந்த வழக்கை அவதானித்துவரும் ஒரு வழக்கறிஞர் எம்மிடம் தெரிவித்தார்.

அதேவேளை, பாலியல் ரீதியிலான குற்றச் சாட்டுக்களுக்கு மேலதிகமாக குறிப்பிட்ட சாமியார் மீது அடுக்கடுக்காக மேலும் பல குற்றச்சாட்டுக்களும் புலம்பெயர் தமிழர்களால் சுமத்தப்பட்டு வருகின்றன.

சட்டவிரோத பணப் பரிமாற்றங்கள், குடிவரவு குடியகல்வு சட்டமீறல் குற்றச்சாட்டுக்கள் என்று பல்வேறு குற்றச்சாட்டுக்கள் அவர் மீது முன்வைக்கப்பட்டு வருகின்றன. சில புலம்பெயர் அமைப்புக்கள் சாமியாருக்கு எதிரான குற்றச் சாட்டுக்களை பாதிக்கப்பட்டவர்களிடம் சேகரித்து அவற்றினை காவல்துறையினரிடம் வழங்குவதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றன.

இது இவ்வாறு இருக்க, சாமியார் மீதான குற்றச்சாட்டுக்கள் 'ஆதாரங்கள் எதுவுமற்ற தவறான குற்றச்சாட்டுக்கள் என்று கைது செய்யப்பட்டுள்ள சாமியாரின் நிறுவனமான 'ஓம் சரவண பாவா சேவா அறக்கட்டளை' தெரிவித்துள்ளது.

சாமியாரின் கைது பற்றி அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'இந்த விவகாரத்தை ஆராயாமல் இருக்க உங்கள் ஒத்துழைப்பைக் கோருகிறோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



இந்த விடயத்தில் தொடர்பு கொள்ள வேண்டாம், அல்லது எந்த வடிவத்திலும் எந்தச் செய்திகளையும் அனுப்ப வேண்டாம் என்று நாங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

நீங்கள் ஏதேனும் செய்தியைப் பெற்றால் பதிலளிக்கவேண்டாம் என்று அந்த அறிக்கையில் கூறியிருந்ததுடன், அந்தச் செய்திகளை நகலெடுத்து நிர்வாகியுடன் பகிரும் படியும் கூறி ஒரு தொர்பிலக்கமும் அந்த அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளது. பாபாஜி குற்றமற்றவர் என்பதை உறுதிப்படுத்த தங்களாலான அனைத்து முயற்சிகளையும் அறக்கட்டளை செய்துவருவதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! யூன் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

10 யூன் 2023 முதல் 16 யூன் 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 11வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சிவக்கொழுந்து செல்லத்துரை

புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சிவக்கொழுந்து செல்லத்துரை அவர்களது 11வது ஆண்டு நினைவு நாள் 11 யூன் 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சிவக்கொழுந்து செல்லத்துரை அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன் னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சரோஜினிதேவி ஞானசேகர்

சுருவிலைப் பிறப்பிடமாகவும் கனடா ரொறன்ரோவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சரோஜினிதேவி ஞானசேகர் அவர்களது இரண்டாம் ஆண்டு நினைவு நாள் 21 யூன் 2023 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரின் குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி சரோஜினிதேவி ஞானசேகர் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திரு பாஸ்கரன் கனகரட்ணம்

வேலணைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பாஸ்கரன் கனகரட்ணம்) அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 15 யூன் 2023 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு. பாஸ்கரன் கனகரட்ணம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் செஞ்சோலை இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சாந்தகுமாரி சுப்பிரமணியம்

யாழ்.கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் சிங்கப்பூர், லண்டன், மலேசியா ஆகிய இடங்களை வதிவிடமாகவும கனடா மிஸிசாகாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சாந்தகுமாரி சுப்பிரமணியம் அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 08 யூன் 2023 வியாழக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சாந்தகுமாரி சுப்பிரமணியம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 9வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நடராஜா கார்த்திகேசு

புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 1ம் வட்டாரத்தை வதிவிடமாகவும் பாரிஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நடராஜா கார்த்திகேசு அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவு நாள் 17 யூன் 2023 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லம் பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். அமரர் நடராஜா கார்த்திகேசு அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## நினைவழியா நினைவஞ்சலிகள்





### திரு செல்லையா சோமசுந்தரம்
### திருமதி செல்வநாயகி சோமசுந்தரம்

யாழ்ப்பாணம் தெல்லிப்பளையைச் சேர்ந்த திரு செல்லையா சோமசுந்தரம் திருமதி சோமசுந்தரம் செல்வநாயகி ஆகியோரது நினைவு நாளையொட்டி கனடாவில் வசிக்கும் அன்னாரது குடும்பத்தினர் 10 யூன் 2023 சனிக்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு செல்லையா சோமசுந்தரம் திருமதி சோமசுந்தரம் செல்வநாயகி ஆகியோரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவர்களது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




08 யூன் 2023 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வி இலா அருணின் 10வது பிறந்த நன்னாளாகும். அன்றையதினம் செல்வி இலா அருண் தனது பெற்றோர் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



10 யூன் 2023 சனிக்கிழமை தெல்லிப்பளையைச் சேர்ந்தவர்களான திரு சோமசுந்தரம் செல்லையா திருமதி செல்வநாயகி சோமசுந்தரம் இணையர்களது நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் இணையர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



11 யூன் 2023 ஞாயிற்றுக்கிழமை புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சிவக்கொழுந்து செல்லத்துரை அவர்களது 11வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



25 மே 2023 கனடாவில் வசிக்கும் திரு திருமதி யூட் ஞானேந்திரன் லாவண்யா இணையர்களது திருமண நன்நாளாகும். அன்றைய நாளுக்காக இணையர்கள் 12 யூன் 2023 திங்கட்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



15 யூன் 2023 வியாழக்கிழமை கொல்லங்கலட்டி தெல்லிப்பளையைச் சேர்ந்த திருமதி செல்லமுத்து வடிவேலு அவர்களின் 87வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி செல்லமுத்து வடிவேலு அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



15 யூன் 2023 வியாழக்கிழமை ரொறன்ரோ கனடாவில் வசிக்கும் திரு ஜெகதீஸ்வரன் தம்பிராஜா அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு ஜெகதீஸ்வரன் தம்பிராஜா அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



15 யூன் 2023 வியாழக்கிழமை வேலணையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பாஸ்கரன் கனகரட்ணம் அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



09 யூன் 2023 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி இணையர்கள் புதுமனைப் புகுவிழாவின் ஓராண்டு நிறைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



08 யூன் 2023 வியாழக்கிழமை வேலணை தலையாட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த இளைப்பாறிய ஆசிரியை திருமதி திலகவதி திருஞானசம்பந்தர் அவர்களது 6வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.

## 87வது பிறந்த நன்நாள் வாழ்த்து



### திருமதி வடிவேலு செல்லமுத்து

யாழ்ப்பாணம் கொல்லங்கலட்டி - தெல்லிப்பளையைச் சேர்ந்த திருமதி செல்லமுத்து வடிவேலு அவர்களது 87வது பிறந்த நன்நாள் 15 யூன் 2023 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் தனது இல்லத்தில் மிக எளிமையாகக் கொண்டாடிய அன்னை வடிவேலு செல்லமுத்து அவர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்கும் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார். அகவை 87 காணும் அன்னை வடிவேலு செல்லமுத்து அவர்களை அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!




ஓம் சக்தி

# ஜெயதுர்க்கா தேவஸ்தானம் - மிசிசாகா

## சோபகிருது வருட மகோற்சவ விஞ்ஞாபனம்

விரவிநின்றொளிரும் வீரமும் துணிவும் மேதினி வாழ்பவர்க் கருளி
பறந்திடு விமானம் பதிந்து பின் இறங்கி பாங்குடன் ஏறிடும் வகையில்
தரைவழி கொண்ட மிசிசாகா பதியில் தான் நிலைத் தெம் மனம் கொள்ளும்
செருக்கழித்தாண்டு சீரருள்புரியும் ஜெயதுர்க்கை அம்பிகைத் தாயே.



**கொடியேற்றம்** 02-07-2023 ஞாயிறு

**மஞ்சம்** 11-07-2023 செவ்வாய்

**சப்பறம்** 14-07-2023 வெள்ளி

**தேர்** 15-07-2023 சனி

**தீர்த்தம்** 16-07-2023 ஞாயிறு


**பூங்காவனம்** 18-07-2023 செவ்வாய்

அம்பிகை அடியார்களே!

சகல வளங்களும் ஒருங்கே அமையப்பெற்ற கனடா நன்னாட்டில் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் ஒன்ராரியோ மாநில மிசிசாகா மாநகரில் திருக்கோவில் கொண்டெழுந்தருளி வேண்டுவோர் வேண்டுவதை ஈய்ந்தருளும் ஜெயதுர்க்கா அம்பாளுக்கு மகோற்சவம் நிகழ திருவருள்கூடியுள்ளது. சோபகிருது வருடம் ஆனித் திங்கள் 18ம் நாள் (02-07-2023) மூல நட்சத்திரமும், பௌர்ணமி திதியும், அமிர்தசித்த யோகமும் கூடியுள்ள நன்னாள் ஞாயிறன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆனி மாதம் 32ம் நாள் (16-07-2023) ஞாயிறன்று தீர்த்த உற்சவத்துடன் 15 தினங்கள் திருவிழாக்கள் கலை நிகழ்ச்சிகளுடன் இனிதே நிகழ ஏற்பாடாகியுள்ளது. அன்பர்கள், அடியார்கள் அனைவரும் பகலும் இரவும் ஆலயத்திற்கு வருகை தந்து திருவிழா வழிபாடுகளில் கலந்து அம்பாள் அருள்பெற்றுப் பேரானந்தப் பெருவாழ்வு வாழ்வீர்களாக.

**1808 Drew Road, Mississauga, Ontario L5S 1J6**
Telephone: 905-612-1856 • www.jeyadhurgatemple.ca

## கிரியா கால நிர்ணயம்







| | | |
|---|---|---|
| அங்குரார்ப்பணம் 01-07-2023 | : | சனிக்கிழமை காலை 9:30 மணிக்கு விநாயகர் வழிபாடு (கணபதி ஹோமம்), மாலை கிராமசாந்தி, பிரவேசபலி, வாஸ்துசாந்தி, மிருத்சங்கிரகணம். |
| கொடியேற்றத் திருவிழா 02-07-2023 | | ஞாயிற்றுக்கிழமை காலை 7:30 மணி காலை பூஜை<br>8:30 ஸ்நபன அபிஷேகம். 9:30 மணி மூலமூர்த்தி பூஜை. 10:15 பேரிதாடனம்.<br>10:30 மணி வசந்தமண்டப பூஜை தொடர்ந்து சுவாமி எழுந்தருளல், ஸ்தம்ப பிரதிஷ்டை, படப்பிரதிஷ்டை, நண்பகல் 11:30 மணிக்கு கொடியேற்றம் (துவஜாரோகணம்), தொடர்ந்து நவசந்திஆவாகணம். விநாயகர், அம்பிகை வீதி உலா, அருட் பிரசாதம் வழங்கல்.<br>மாலை 4:30 மணி ஸ்நபனா அபிஷேகம், 5:15 மணி யாகபூஜை,<br>6:30 மணி மூலமூர்த்தி பூஜை தொடர்ந்து ஸ்தம்ப பூஜை.<br>8:00 மணி வசந்த மண்டப பூஜை, அம்பிகை வீதி உலா, அருட்பிரசாதம் வழங்கல். |
| இரண்டாம் திருவிழா 03-07-2023 | : | திங்கட்கிழமை 8:30 மணி காலை பூஜை. 9:30 மணி ஸ்நபன கும்ப அபிஷேகம்.<br>பகல் 11:00 மணி மூலமூர்த்தி பூஜை. 11:30 ஸ்தம்ப பூஜை. நண்பகல் 12:00 மணி வசந்த மண்டப பூஜை, அம்பிகை வீதி உலா, அருட்பிரசாதம் வழங்கல்.<br>மாலை 5:15 மணி ஸ்நபன அபிஷேகம், 6:30 மணி மூலமூர்த்தி பூஜை தொடர்ந்து ஸ்தம்ப பூஜை. 8:00 மணி வசந்த மண்டப பூஜை,<br>அம்பிகை வீதி உலா, அருட் பிரசாதம் வழங்கல். |
| 03-07-2023 முதல் 14-07-2023 வரை | | இரண்டாம் திருவிழா முதல் பதின்மூன்றாம் திருவிழா (சப்பறத் திருவிழா) வரை பகல் இரவு உற்சவங்கள் ஒரே நேர அட்டவணைப்படி நடைபெறும்.<br>இரவு 7:30 - 8:00 மணி வரை கலை நிகழ்ச்சி |
| தேர்த்திருவிழா (இரதோற்சவம்) 15-07-2023 | : | காலை 6:30 மணி காலைப் பூஜை.<br>7:00 மணி ஸ்நபனா அபிஷேகம், 8:30 மணி மூலமூர்த்தி பூஜை, தொடர்ந்து ஸ்தம்ப பூஜை, 10:00 மணி வசந்த மண்டப பூஜை,<br>11:30 மணிக்கு அம்பாள் சித்திரத் தேரில் அருட்காட்சி, தொடர்ந்து இரதபவனி இடம்பெறும். பிற்பகல் 1:30 மணி அம்பாளுக்கு பச்சைசாத்தி, இரதஅவரோகணம், தொடர்ந்து பிராயச்சித்த அபிஷேகம் நடைபெற்று அருட்பிரசாதம் வழங்கல்.<br><br>மாலை 7:00 மணி மூலமூர்த்தி பூஜை, ஸ்தம்ப பூஜை.<br>8:00 மணி வசந்த மண்டப பூஜை, அம்பாள் தேரடிபார்த்தல் உற்சவம், அருட்பிரசாதம் வழங்கல். |
| தீர்த்தத் திருவிழா 16-07-2023 | : | ஞாயிறுக்கிழமை காலை 6:30 மணி காலைப்பூஜை, 7:00 மணி ஸ்நபன கும்ப அபிஷேகம் 8:30 மணி மூலமூர்த்தி பூஜை, ஸ்தம்ப பூஜை, பேரிதாடனம், சூர்னோற்சவம், தொடர்ந்து வசந்தமண்டப பூஜை, தீர்தோற்சவம். யாக மகாபூர்ணாகுதி, யாககும்ப அபிஷேகம், அருட்பிரசாதம் வழங்கல்.<br>மாலை 6:00 மணி மூலமூர்த்தி பூஜை,<br>6:30 மணி வசந்த மண்டப பூஜை தொடர்ந்து ஸ்தம்ப பூஜை,<br>கொடியிறக்கம் (துவஜஅவரோகணம்). நவசந்தி விதர்சனம், மௌன உற்சவம், சண்டேஸ்வர உற்சவம், ஆச்சார்ய கௌரவம், ஆசீர்வாதம், அருட்பிரசாதம் வழங்கல். |
| 17-07-2023 | : | திங்கள் - காலை 10:30 மணி பிராயச் சித்த அபிஷேகம் |
| 18-07-2023 | : | செவ்வாய் - பூங்காவனம் - மாலை 5:30 மணி ஸ்நபன அபிஷேகம், 7:00 மணி இரவு பூஜை தொடர்ந்து பூங்காவனத்திருவிழா நடைபெற்று அருட்பிரசாதம் வழங்கல். |
| 21-07-2023 | : | வெள்ளி (ஆடிப்பூரம்) - 7:00 மணி இரவு பூஜையைத் தொடர்ந்து வைரவர் மடை, அருட்பிரசாதம் வழங்கல் |

குறிப்பு: திருவிழாக்காலங்களில் காவடி, கற்பூரச்சட்டி (வெளி வீதிக்கு மட்டும்), மற்றும் பால்குடம் எடுக்க விரும்பும் அடியார்கள் தயவு செய்து ஆலயத்தில் முற்கூட்டியே பதிவு செய்யுமாறு வேண்டுகின்றோம். அத்துடன் அம்பிகைக்கான அபிஷேகப் பொருட்கள், பால், தயிர் போன்றன ஏற்றுக்கொள்ளப்படும்.

# கஜேந்திரகுமாரில் கை வைத்ததன் மூலம் சிங்கள பௌத்த உணர்வுகளைத் திருப்திப்படுத்த முடியுமா?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –



மருதங்கேணிச் சம்பவமானது ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினருக்கு இந்த நாட்டில் உள்ள மதிப்பு எவ்வளவு என்பதை உணர்த்துகின்றது. கஜேந்திரகுமார் உட்பட அவருடைய கட்சியை சேர்ந்த மூன்று பேர்கள் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். காவல்துறை தன் கடமையைச் செய்வதற்கு இடையூறு விளைவித்ததாக அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டு இருக்கிறது.

அச் சம்பவமும் அதன் தொடர்ச்சியாக நிகழ்ந்த கைது நடவடிக்கைகளும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவுத் தளத்தை ஒப்பீட்டளவில் பலப்படுத்தியிருக்கின்றன. எனினும், அக் கட்சியின் அரசியல் எதிரிகளும், அக்கட்சியின் தூய்மைவாத நடவடிக்கைகளால் எரிச்சல் அடைந்தவர்களும், மருதங்கேணிச் சம்பவத்தை ஒரு நாடகம் என்று வர்ணிக்கின்றார்கள்.

மற்றொரு தரப்பினர் இது தொடர்பில் ஒரு சூழ்ச்சி கோட்பாட்டை முன்வைக்கிறார்கள். இந்தியாவைக் கடுமையாக விமர்சிக்கும் ஒரு கட்சியை மேலும் பலப்படுத்துவதன் மூலம் தமிழ் மக்கள் மத்தியிலேயே இந்திய எதிர்ப்பை பலப்படுத்தும் உள்நோக்கம் அரசாங்கத்திடம் உண்டு என்றும் அவர்கள் சந்தேகிக்கின்றார்கள். தனது தூய்மை வாதத்தின் மூலம் தமிழ் கட்சிகளுக்கு இடையே ஐக்கியம் ஏற்படுவதைத் தடுக்கும்ஒரு கட்சியை பலப்படுத்துவதன் மூலம் தமிழ் மக்கள் ஒரு தேசமாகத் திரள்வதைத் தடுக்கும் நோக்கத்தோடு அரசாங்கம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு எதிராக நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் அவர்கள் சந்தேகிக்கின்றார்கள்.

அதேசமயம் இக்காலப் பகுதியில் ஒரு பேப்பர் கட்டிங் சமூக வலைத்தளங்களில் பரவலாகப் பகிரப்படுகிறது. அது விடுதலைப்புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட கால கட்டம் ஒன்றில் அது தொடர்பாக டெலோ இயக்கமும் குமார் பொன்னம்பலமும் தெரிவித்த கருத்துக்களைக் கொண்ட ஒரு செய்திக் குறிப்பாகும். குமார் பொன்னம்பலம் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டமையை ஆதரித்து கருத்து தெரிவித்திருக்கிறார்.

மருதங்கேணிச் சம்பவத்தை ஒரு நாடகம் என்று வர்ணிக்கும் முன்னணியின் அரசியல் எதிரிகள் மேற்படி பேப்பர் கட்டிங்கைப் பரவலாகப் பகிர்ந்து வருகிறார்கள். மருதங்கேணியில் முன்னணி வேண்டுமென்று முரண்பாடுகளை தூண்டி விட்டது என்று விமர்சிக்கும் தரப்புகள் குமார் பொன்னம்பலத்தின் விசுவாசத்தை கேள்விக்கு உள்ளாக்கும் நோக்கத்தோடு மேற்படி பேப்பர் கட்டிங்கைப் பகிர்ந்து வருகிறார்கள்.

கடந்த 14ஆண்டு கால தமிழ் அரசியலில் விகாரமாக மேலெழுந்து வரும் ஒரு போக்கு இது. தமது அரசியல் எதிரிகளுக்கு எதிராக சூழ்ச்சிக் கோட்பாடுகளை உருவாக்குவது. முன்பு மொட்டைக்கடிதம் இருந்தது. இப்பொழுது புனை பெயரில் முகநூல் கணக்கு உள்ளது. தமக்குத் தெரியாத ஒன்றைப் பற்றி கருத்து கூறும் சுதந்திரத்தையும் துணிச்சலையும் சமூக வலைத்தளங்கள் அதிகப்படுத்தியுள்ளன.

அதனால் யானை பார்த்த குருடர்கள் எல்லாம் விமர்சகர்கள் ஆகிவிட்டார்கள். அவர்கள் ஒரு கூட்டமாகச் சேர்ந்து சமூக வலைத்தளங்களில் தமது அரசியல் எதிரிகளின் மீது கீழ்த்தரமான தாக்குதல்களை நடத்தி வருகிறார்கள்.குமார் பொன்னம்பலம் சம்பந்தப்பட்ட பேப்பர் கட்டிங்கை பரவலாக்குவதும் அதே சீரழிந்த விமர்சனப் பண்பாட்டின் ஒரு வெளிப்பாடு தான்.



ஆனால் அந்த விமர்சனப் பண்பாட்டை வளர்த்தெடுத்ததில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் பெரிய பங்கு உண்டு. தமது அரசியல் எதிரிகளை இனத்துரோகிகளாக சித்தரிப்பதன் மூலம் அவர்களின் ஆளுமையை சிதைக்கும் ஒரு அரசியல் விமர்சனப் பண்பாட்டை அக்கட்சி தான் அதிகமதிகம் முன்னெடுத்தது. தமிழ் அரசியலில் விமர்சனத்தை அவதூறாக மாற்றியதில் அக்கட்சிக்குப் பெரிய பங்குண்டு. இப்பொழுது அவர்கள் மீதும் அதே விதமாக சூழ்ச்சிக் கோட்பாடு முன் வைக்கப்படுகிறது.

குமார் பொன்னம்பலம் சம்பந்தப்பட்ட அந்த பேப்பர் கட்டிங்கில் இருப்பது உண்மையா பொய்யா என்பதை உறுதிப்படுத்த வேண்டும். சிலவேளை, அச்செய்தி உண்மையாக இருந்தாலும், அதை மட்டும் வைத்து குமார் பொன்னம்பலத்தை மதிப்பிட முடியாது. அவருடைய வாழ்க்கையை முழுமையாகத் தொகுத்துப் பார்க்க வேண்டும். அந்த பேப்பர் கட்டிங்கில் காணப்படும் செய்தி உண்மையாக இருந்தால் அது அவருடைய ஒரு காலகட்ட அரசியல் நிலைப்பாடு என்றே எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஆனால் பிறகு ஒரு காலம் அவருடைய வேறொரு அரசியல் நிலைப்பாட்டுக்காகவே அவர் கொல்லப்பட்டார். அந்த நேரத்தில் அவர் தனது கொழும்பு மைய வாழ்க்கையை, தன்னுடைய சொத்துக்களை பாதுகாக்கும் ஓர் அரசியல் நிலைப்பாட்டை எடுத்திருந்திருந்தால் அவர் தன் உயிரை பாதுகாத்து இருந்திருக்கலாம்.

தமிழ் அரசியலில் சட்டச் செயற்பாட்டாளர்கள் என்று பார்க்கும் பொழுது, குறிப்பாக பயங்கரவாத தடைச் சட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களிடம் ஒரு சதம் கூட வாங்காமல் வழக்காடியவர் என்று பார்க்கும் பொழுது, குமார் பொன்னம்பலத்தின் வாழ்வு பெரியது. மனிதர்களை அவர்களுடைய தொகுக்கப்பட்ட வாழ்க்கைக்குள்ளால் தான் நிறுக்கலாம். ஒரு மனிதருடைய ஒரு கால கட்ட நிலைப்பாட்டை மட்டும் வைத்து அவரை நிறுக்க முடியாது. எதிலும் ஒரு தொகுக்கப்பட்ட முழுமையான பார்வை அவசியம். தமிழ் அரசியலில் ஒருவர் தனது துறை சார்ந்து அதிகமாக தொண்டு செய்தாரா அல்லது தொழில் செய்தாரா என்று பார்க்க வேண்டும். இது குமார் பொன்னம்பலத்துக்கும் பொருந்தும். முன்னணியால் கேவலமாகவும் கீழ்த்தரமாகவும் விமர்சிக்கப்பட்டவர்களுக்கும் பொருந்தும்.

மருதங்கேணிச் சம்பவத்தின் பின்னணியில் அக்கட்சியை விமர்சிக்கும் பலரும் முன்னணி வேண்டுமென்றே முரண்பாட்டை தோற்றுவிக்கிறது என்றே விமர்சித்து வருகிறார்கள். ஆனால் முன்னணி முரண்பாட்டை தோற்றுவித்ததா இல்லையா என்பதல்ல இங்கு பிரச்சனை. அது ஒரு முரண்பாடாக வளரக்கூடிய அரசியல் சூழல் இப்பொழுதும் உண்டு என்பது தான் இங்கு பிரச்சனை. தமிழ் கட்சிகளின் நிகழ்வுகளிலும் ஏனைய பொது நிகழ்வுகளிலும் அரச புலனாய்வுத் துறையின் பிரசன்னம் எனப்படுவது கடந்த 14 ஆண்டு கால யதார்த்தம். குறிப்பிட்ட ஒரு அரசியல் நிகழ்வை குறிப்பாக தீவிர நிலைப்பாட்டை கொண்ட ஒரு கட்சியின் அசைவுகளை கண்காணிப்பதற்கும் அறிக்கையிடுவதற்கும் புலனாய்வுத்துறை அக்கட்சியின் நடவடிக்கைகளைப் பின் தொடர்வது வழமை.




போர்க்காலங்களில் அது அச்சுறுத்தலான ஒரு நடவடிக்கையாக இருக்கும். ஆயுத மோதல்கள் இல்லாத காலங்களில் அது நாகரிகமான வழி முறையாக இருக்கும். இது தமிழ் அரசியல் செயற்பாட்டுக் களத்துக்கு மட்டும் உரிய ஒரு யதார்த்தம் அல்ல. தென்னிலங்கையில் தன்னெழுச்சிப் போராட்டங்களின் பின்னணியில் அங்கேயும் அது தான் யதார்த்தம். ஆனால் இன முரண்பாடுகள் எரிபற்று நிலையில் காணப்படும் ஓர் அரசியல் களத்தில் புலனாய்வுத் துறையின் செயல்பாடுகள் அச்சுறுத்தலாகவே பார்க்கப்படும்.

கடந்த 14 ஆண்டு காலமாக அதை ஒரு விவகாரமாக மாற்றி அதற்கு எதிராக போராடக் கூடிய ஒரு நிலைமை தமிழ் பரப்பில் குறைவாகவே காணப்பட்டது. மருதங்கேணிச் சம்பவத்திலும் கூட ஒரு புலனாய்வாளர் கஜேந்திரக்குமாரை தட்டிவிட்டுத் தப்பிச் செல்கிறார். அவரை கஜேந்திரக்குமாரின் கட்சிக்காரர் மட்டுமே துரத்திச் செல்கிறார். அங்கே சந்திப்புக்கு வந்திருந்த பொது மக்களில் யாரும் துரத்தி செல்லவில்லை.

ஏனென்றால் அப்படித் துரத்தி செல்வதற்கான துணிச்சல் அங்கிருந்த பலருக்கும் இருக்கவில்லை. இது ஒரு தமிழ் யதார்த்தம்.இந்த யதார்த்தத்தை உடைத்துக் கொண்டு முன்னணி போராடுகிறது என்பது உண்மை. அதனால் தான் கட்சியின் தலைவருமுட்பட மூவர் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். இது தமிழ் அரசியலில் காணப்படும் அச்சுறுத்தலான ஒரு சூழலைக் காட்டுகின்றது. ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் அவருக்குள்ள சிறப்புரிமைகளின் பிரகாரம் அதிலிருந்து தப்ப முடியும். ஆனால் ஏனைய கட்சித் தொண்டர்களின் நிலை எப்படி அமையும்?

தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டத்திலும் உயர் பாதுகாப்பு வலையத்துள் அமைந்திருக்கும் அந்த காணிக்குள் கஜேந்திரன் மட்டும் தனி மனிதனாக இருந்து போராடினார். அவரைச் சூழ்ந்து மிகக் குறைந்த ஆதரவாளர்களே காணப்பட்டார்கள். அந்த விகாரைக்கு எதிரான போராட்டத்தில் பங்கு பற்றிய மக்களின் தொகையை வைத்துக் கணக்கிட்டால் சிங்கள பௌத்த மயமாக்கலுக்கு எதிரான போராட்டத்துக்கு தமிழ் மக்களின் ஆதரவு குறைவாக இருக்கிறது என்று ஒரு முடிவுக்கு அரசாங்கம் வரக்கூடுமா என்று ஒரு செயற்பாட்டாளர் கேட்டார்.

தமிழ் மக்கள் இது போன்ற விடயங்களில் அரச படைகளை அல்லது காவல்துறையை அல்லது புலனாய்வுத் துறையை எதிர்த்துப் போராடுவதற்கு இப்பொழுதும் தயங்குகிறார்கள். இந்த விடயத்தில் பயத்தை உடைத்துக் கொண்டு போராட்டங்களை முன்னெடுப்பதில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஒரு முன்மாதிரியை காட்டுகிறது. எனவே தமிழ் மக்களைத் தொடர்ந்தும் பயப் பிராந்திக்குள் வைத்திருப்பதற்கே மேற்கண்ட கைது நடவடிக்கைகள்.

அரசாங்கம் கஜேந்திரக்குமாரில் கை வைத்ததன் மூலம் சிங்கள பௌத்த உணர்வுகளைத் திருப்திப்படுத்த முடியும். இது அடுத்த ஆண்டு நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலை நோக்கி தனது ஆதரவுத் தளத்தைப் பலப்படுத்த ரணிலுக்கு உதவும். மேலும் ஜ.எம்.எப்பின் நிபந்தனைகளால் பாதிக்கப்பட்ட சிங்கள மக்களின் கோபத்தைத் திசைதிருப்பவும் உதவும்.

# மதுசிகன்:- காரிருள் சூழ்ந்த இலங்கையின் இளைய சமூகத்தின் மத்தியில் ஓர் விடிவெள்ளி



கட்டுரையாளர்:
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -

தவேந்திரன் மதுசிகன் வயதுக்கும் ஆற்றலுக்கும் இடையில் உள்ள ஆச்சரியங்களைப் பற்றி வியந்திருக்கிறோம். நம்முடைய காலம் அப்படியிருந்தது. மிகக் குறைந்த வயதில் மிகப் பெரிய ஆற்றலை வெளிப்படுத்திய பலரை ஈழப்போராட்டம் கண்டிருந்தது. துணிச்சல், வீரம், அர்ப்பணிப்பு, சாதனை, ஆற்றல் எனப் பல வடிவங்களில் இதனை நாம் பலரிடம் கண்டிருக்கிறோம். இவை பற்றிய விமர்சனங்கள் யாருக்கும் இருக்கக் கூடும். அல்லது அவற்றில் சரி பிழைகள் இருக்கலாம். ஆனால், ஒவ்வொரும் வெளிப்படுத்திய




சாதனைகள் பெரிது. மிகச் சாதாரண குடும்பப் பின்னணியிலிருந்து வந்தவர்கள். மிகப் பெரிய இராணுவ வல்லுனர்களாக இருந்திருக்கிறார்கள். மிகப் பரந்த அளவில் அரசியல் திறனை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். மிகச் சிறந்த எழுத்தாளர்களாகியிருக்கிறார்கள். ஈழப் போராட்ட இயக்கத் தலைவர்களில் பெரும் பாலானோர் அவர்களுடைய இருபதுகளிலேயே மிகப் பிரபலம் பெற்றிருக்கிறார்கள். அந்தக் களம் அப்படியானவர்களின் ஆற்றலுக்குக் களம் அமைத்தது. அல்லது அந்தக் களத்தில் அவர்கள் உருவாகினார்கள்.

இன்று அவையெல்லாம் கனவாகிப் போயிருக்கலாம். ஆனால், வரலாறு அதையெல்லாம் கணக்கெடுத்துள்ளது என்பது மெய்.

போராட்டக் காலத்தில் இரு பெரும் பிரிவுகள் இருந்தன. ஒன்று விடுதலைக்கான செயற்பாடுகள். இன்னொன்று விடுதலைக்கு எதிரான செயற்பாடுகள். இந்த இரண்டுக்குள்ளும் சிக்குண்ட தமிழ்ச்சமூகம் அடைந்த துயரமும் அவலமும் கொஞ்சமல்ல. கலக்கத்துடன் தான் அன்றைய பெற்றோர் இருந்தனர். தங்கள் பிள்ளைகளைக் குறித்த அச்சமும் துயரமும் அவர்களைப் பாடாய்ப் படுத்தியது. அதிலும் அன்னையர் அடைந்த துயரம் மிகப் பெரிது. பிள்ளை பெறாதோரும் பால் கொடாதோரும் மகிழ்ந்திருக்கும் காலமொன்று வந்ததே என்று பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்படுவதையும் விட அனைவரையும் துயரமும் அவலமும் ஆட்கொண்டிருந்த காலம் — சூழல் — அது.

போராட்டம் முடிவுற்ற பின்னர், இன்றைய நாட்களில் இந்தத் துயரமும் அச்சமும் இன்னொரு விதமாகப் பெற்றோரையும் சமூகத்தையும் ஆட்டிப் படைக்கிறது. இன்றைய இளைய தலைமுறை பள்ளிப் பருவத்திலேயே வழி தவறிய மந்தைகளாக போதைப் பொருளுக்கும் சமூக வன்முறைக்கும் பலியாகியுள்ளது. இன்னொரு தரப்பு இலக்கற்று செல்போனுக்கு அடிமைப் பட்டுக் கிடக்கிறது. மற்றொரு தரப்பு விட்டேத்திகளாகத் திரிகிறது. இதைக் குறித்த கவலைகளுக்கு மருந்தென்ன என்று யாருக்குமே தெரியவில்லை. உண்மையில் இது ஒரு கையறு நிலையே.

யுத்தத்திற்குப் பின்னர் இளைய தலைமுறையை வழிப்படுத்தக் கூடிய மாற்றுப் பொறிமுறைகளையும் வழிமுறைகளையும் செய்யத் தவறியதன் விளைவே இதுவாகும். குறிப்பாக இளையோருக்கான தொழில்வாய்ப்புகள் இல்லாத நிலை. முன்னுதாரணம் கொள்ளக் கூடிய முன்னோடிகளும் தலைவர்களும் இல்லாது போனமை. இளையோர் இணைந்து செயற்படத்தக்க அமைப்புகளும் செயற்பாட்டியக்கங்களும் இல்லை என்பது. இருப்பனவெல்லாம் உழுத்துப் போன அரசியற் கட்சிகள். அவற்றில் இணைந்து செயற்படும் இளைய தலைமுறை அர்ப்பணிப்பு சமூகச் செயற்பாடு என்பதற்கு அப்பால் குறுகிய வழிகளில் ஆதாயம் தேடுகின்ற வழிகளைப் பற்றியே சிந்திக்கிறது.

இப்படியான நிலையில் அபூர்வமாகவும் அதிசயமாகவும் அங்கொன்று இங்கொன்றாக சில இளைஞர்கள் எழுந்து வருகிறார்கள். காரிருளின் மத்தியில் தோன்றுகின்ற ஒற்றை நட்சத்திரத்தைப் போன்ற இவர்களே நமக்குக் கிடைக்கின்ற சிறிய ஆறுதலும் மகிழ்ச்சியும் பெருமையுமாகும். அப்படியான ஒரு நம்பிக்கை நட்சத்திரமே மட்டக்களப்பைச் சேர்ந்த தவேந்திரன் மதுசிகன். க.பொ.த. உயர்தரப்பரீட்சை எழுதி விட்டுக் காத்திருக்கிறார் மதுசிகன். சரியாகச் சொன்னால் பரீட்சை எழுதி விட்டு அவர் பெறுபேற்றுக்காகக் காத்திருக்கவில்லை. பரீட்சை முடிவு எப்படி வந்தாலென்ன? அதற்கப்பால் மதுசிகனுக்கு ஆயிரம் வாசல்கள். ஆயிரமாயிரம் பாதைகள். அவர் தேர்ந்த பாதைகளா அல்லது அவர் தானாகவே உருவாக்கிய பாதைகளா என்று தெரியாது. அல்லது இரண்டுமாக இருக்கலாம். இன்று அவர் ஒரு சாதனையாளர். வயது 21தான். இந்த வயதில் அவருடைய சாதனையும் சிந்தனையும் மிகப்பெரிதாக உள்ளது. ஆச்சரியங்களைத் தருகிறது.

இந்த வயதில் மதுசிகன், பாக்கு நீரிணையை நீந்திக் கடந்திருக்கிறார். இலங்கையில் மிக இளைய வயதில் பாக்குநீரிணையைக் கடந்த நீச்சலாளர் என்ற பெயரை எடுத்திருக்கிறார். இது எப்படி ஏற்பட்டது?

மதுசிகனே சொல்கிறார்.

எனக்குப் பதின்நான்கு வயதிருக்கும் போதே நீச்சலில் ஈடுபட வேணும் என்ற எண்ணம் வந்தது. அதற்குக் காரணம். நாங்கள் இருந்த மட்டக்களப்பு கல்லடிக் கடலில் பலர் அவ்வப்போது மாண்டு போவார்கள். நீச்சல் சரியாகத் தெரியாமல் கடலில் இறங்குவதே இதற்குக் காரணம். இதனால் நான் நீச்சல் பழக வேணும் என்று யோசித்தேன்.

அதற்குப் பிறகு வீட்டில் குளிப்பதை விடக் கடலில் குளிப்பதே என்னுடைய வழமையாகியது. ஆனால், இதைப்பற்றி அப்பொழுது வீட்டுக்குத் தெரியாது. நண்பர்களுடன் கடலில் விளையாடத் தொடங்கினேன். கடலுக்கும் எனக்குமான உறவு வளரத் தொடங்கியது. கடற்கரையிலேயே என்னுடைய பெரும்பாலான பொழுதுகள் கழிந்தன. நண்பர்கள் எனக்கு உதவியாக, ஊக்கமாக இருந்தார்கள். 17, 18 வயதில் கடலுக்கும் எனக்கும் நெருக்கம் கூடியது. அப்பொழுது நான் என்னுடைய பாடசாலையான புனித மிக்கேல் கல்லூரியின் சாரணர் இயக்கத்திலும் இணைந்திருந்தேன். சாரணர் பயிற்சிப் பாசறையில் ஆர்வத்தோடு கலந்து கொண்டேன். அதில் திறமையாகச் செயற்பட்டதற்காக மாகாண மட்டத்தில் சாதனையாளர் விருது கிடைத்தது. கோல்ட் மெடல், சில்வர் மெடல் எல்லாவற்றையும் பெற்றேன். எனக்கு ஊக்கமாக சீனியரான சஞ்சீவன் அமலநாதன் உதவினார்.

என்னுடைய நீந்தும் ஆர்வத்தைப் பற்றியும் நான் கடலில் நீந்துவதைப் பற்றியும் வீட்டாருக்குத் தெரியவந்தது. ஆனாலும் அவர்கள் தடுக்கவில்லை. படிப்பைக் கெடுத்துக் கொள்ளாமல் உன்னுடைய நீச்சலைத் தொடர்ந்து கொள் என்று அப்பாவும் அம்மாவும் சொன்னார்கள். அவர்களுடைய விருப்பத்துக்காகவும் அதில் உள்ள நியாயத்துக்காகவும் க.பொ.த. உயர்தரப் பரீட்சையை எழுதும் வரை நீச்சலை மட்டுப்படுத்தி வந்தேன். ஆனாலும் கடல் என்னுடைய மனதில் நிறைந்து போய் கிடந்தது. நித்திரையில் கூட கடலின் குளிர்மையை உணர்ந்தேன். அதனுடைய அசைவையும் ஓசையும் கேட்டுக் கொண்டேயிருந்தேன்.

பரீட்சை முடிந்த கையோடு கொழும்புக்குச் சென்று, கல்கிசைக் கடலில் பயிற்சி பெற்றேன். இதற்கு அப்பாவும் அம்மாவும் உதவினார்கள். சஞ்சீவன் அண்ணா நல்ல தொடர்புகளை எடுத்துத் தந்து கொண்டிருந்தார். பாடசாலையும் ஊக்கப்படுத்தியது. நண்பர்கள் ஆதரவாக கல்கிசைக் கடலில் றொஷான் அபேயசுந்தர (Roshan Abayasundara) என்ற நீச்சலாளர் எனக்குப் பயிற்சியளித்தார். அவர் இலங்கை விமானப்படையில் பணியாற்றியவர். 2021இல் பாக்குநீரிணையை நீந்திக் கடந்தவர். ஆறு மாதப் பயிற்சியில் எனக்கு நல்ல நம்பிக்கை ஏற்பட்டது. நானும் பாக்குநீரிணையை நீந்திக் கடப்பேன் என்று. ஆனாலும் என் நண்பர்களுக்கும் வீட்டாருக்கும் இதில் சற்று தயக்கம் உண்டென உணர்ந்தேன். என்றாலும் என்னுடைய ஆர்வத்தையும் ஊக்கத்தையும் நம்பிக்கையையும் அவர்கள் மதித்தனர்.

இதற்கிடையில் நான் இன்னொன்றையும் சொல்ல வேணும். கடலில் நான் நீந்தத் தொடங்கும்போது இந்தக் கடலுக்கு நான் எதையாவது செய்ய வேண்டும் என்று விரும்பினேன். நான் இயங்கிய சாரணர் இயக்கத்திலும் சமூகச் செயற்பாட்டில் ஈடுபட வேண்டிய பொறுப்பிருந்தது. அப்படிச் செயற்பட்டால் தான் ஜனாதிபதி விருதைப் பெறமுடியும்.

ஆகவே பிளாஸ்டிக் இல்லாத கடலை (plastic-free ocean) உருவாக்க வேண்டும் என விரும்பினேன். (22ம்பக்கம்)



# இந்தியாவின் புதிய எழுச்சியும் ஈழத்தமிழரது அரசியல் அதிகாரத்துக்கான எதிர்காலமும்

கட்டுரையாளர்:
இலங்கையில் இருந்து
– K.T.கணேசலிங்கம் –



இலங்கை-இந்திய அரசியல் – பொருளாதார உறவு வலுவான நிலையில் இருப்பதாகவே தெரிகிறது. இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவரும் இந்திய வெளியுறவு அமைச்சரும் அத்தகைய உறவு நிலையை அடையாளப்படுத்தும் விதத்தில் அண்மைக் கால வெளிப்பாடுகள் அமைந்துள்ளன.

புரிதலோடு அவதானிக்கும் போது புதுடில்லி-கொழும்பு உறவு பலமானதாகவே அமைந்து வருகிறது. இது கொழும்பு நோக்கில் இல்லாதிருந்தாலும் புதுடில்லியின் அணுகுமுறையில் அத்தகைய நட்புறவை பேணவே அதிகம் முனைகிறதென்பது மேற்குறிந்த இரு இராஜதந்திரமான வெளிப்பாடுகள் உணர்த்துகின்றன. இக்கட்டுரை இந்திய – இலங்கை உறவையும் அதனைக் கடந்து இந்தியாவின் போக்குகள் சார்ந்தும் தேட முயலுகிறது.

வடமாகாண ஆளுநர் பி.எப்.எம். சாள்ஸ்ஸை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பால்கே 27.05.2023 அன்று அவரது அலுவலகத்தில் சந்தித்து உரையாடிய போது வடக்கு மாகாண மக்களின் நலனுக்காக இந்தியா அர்ப்பணிப்புடன் செயல்படும் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கும் போது வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி மற்றும் மக்களின் நலனில் இந்தியா அக்கறையுடன் செயல்படும் எனவும் வெளிப்படுத்தியிருந்தார்.

இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய் சங்கர் கருத்தரங்கொன்றில் உரையாற்றும் போது, சர்வதேச நாணய நிதியத்தை விட இந்தியா இலங்கைக்கு அதிகளவு நிதி உதவியினை வழங்கியுள்ளதாக தெரிவித்திருந்தார். அவர் மேலும் வெளிப்படுத்தும் விடயங்களாக, இந்தியப் பெருங் கடலிலுள்ள தீவுகள், வளைகுடா நாடுகள், தென்கிழக்காசிய நாடுகள் என்பவற்றை உள்ளடக்கிய விஸ்தரிக்கப்பட்ட அயலக உறவை உருவாக்குவது குறித்துபிரதமர் மோடி தலைமையிலான இந்திய அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

இந்தியா எழுச்சி பெறும் சக்தி என்ற தொனிப்பொருளில் கருத்துரைக்கும் போதே அத்தகைய இந்திய நிலைப்பாட்டை அடையாளப்படுத்தினார். மேலும் தொடர்புகளும் அண்டை நாடுகளில் இந்தியா பற்றிய பார்வையும் மாற்றமடைந்துள்ளது. இலங்கையில் கடந்த வருடம் நடைபெற்ற விடயங்களை விட வேறு எதுவும் வியத்தகு விதத்தில் இதனை வெளிப்படுத்த முடியாது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் போது முன்னர் ஒரு போதும் இல்லாத வகையில் இந்தியா உதவியது. இந்த அரங்கிலிருக்கும் எவரேனும் இலங்கைக்கு சமீபத்தில் சென்றிருந்தால் இந்த உதவியால் இந்தியா குறித்த மாற்றமடைந்துள்ள கருத்தை அவதானிக்க முடியும். தற்போதைய இந்திய அரசாங்கம் தற்போது பெரும் இலட்சியம் மிக்க செல்வாக்கு மிக்க இந்தியாவுக்காக முயற்சிக்கிறது. இந்தியா தனது அயலக உறவை விஸ்தரிக்க முயலுகிறது. இந்தியா தனது அயலக உறவில் சுருக்கப்பட்ட பார்வையிலிருந்து இலட்சியம் மிக்க பார்வையை நோக்கி மாற முயலுகிறோம் எனத் தெரிவித்துள்ளார்.

இரு இந்திய .ராஜதந்திரிகளதும் உரையாடலை அவதானிக்கும் போது பின் வரும் நியமங்களை நோக்கி இந்தியா நகர்வதாகவே விளங்கிக் கொள்வது பொருத்தமானது. முதலாவது இந்தியத் தூதுவர் கோபால் பால்கேவினது வட மாகாணம் பொறுத்த இந்திய நிலைப்பாடு பொருளாதார அபிவிருத்தி சார்ந்தது. அதிலும் இந்தியாவின் பொருளாதார முதலீட்டுத் திட்டங்கள் குறித்தே தூதுவர் வடக்கு ஆளுநருடன் அதிகம் உரையாடியுள்ளார். அவ்வாறாயின் இந்தியா வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்திலுள்ள பொருளாதார திட்டங்களை முதன்மைப்படுத்தியே கவனம் கொள்கிறது. அண்மையில் கிழக்கு மாகாண ஆளுநருடனும் உரையாடும்



போது தூதுவர் அத்தகைய பொருளாதார அபிவிருத்தி பற்றியே உரையாடியிருந்தார். வடக்கு கிழக்கில் உள்ள மக்களது நலன் பொருளாதார அபிவிருத்தி என்ற நிலைப்பாட்டை இந்தியா கொண்டுள்ளது என்ற முடிபையே இத்தகைய நகர்வுகள் தெளிவுபடுத்துகின்றன. அரசியல் தீர்வு பற்றிய உரையாடலை அதிகம் உச்சரிக்கும் முழுமையாக ஈழத்தமிழர் இழக்கும் நிலை ஏற்படும். இது இந்தியாவின் செல்வாக்கை முழுமையாக இலங்கைத் தீவிலிருந்து அகற்றும். தென் இலங்கை ஆட்சியாளருடன் ஒன்றிணைந்து செயல்படலாம் என இந்திய இராஜதந்திரிகளும் கொள்கை வகுப்பாளர்களும் கருதலாம்.

ஆனால் கடந்தகால இராஜதந்திரிகளான ரொமேஸ் பண்டாரி, டீக்ஷித் மற்றும் வெங்கடேஸ்வரன் போன்றவர்களது அனுபவத்தை இவர்கள் விளங்கிக் கொள்வது சிறப்பானதாக அமையும். அவர்களது அனுபவத்தை கொண்டு நோக்கும் போது இலங்கைத்தீவில் இந்தியாவுக்கு அயல்நாடு என்ற அடிப்பற்றிய அணுகு முறை எதனையும் கருத்தில் கொண்டிருக்கவில்லை என்பது இந்திய வெளியுறவு அமைச்சரது வெளிப்பாடு தருகிறது. இந்து சமுத்திர தீவு நாடுகளை நோக்கிய உறவானது பொருளாதார தேவைகளை வலுப்படுத்தும் உத்தியுடன் கட்டமைக்கப்படுவதாகவே தெரிகிறது.

ஏற்கனவே இந்தியா ஏற்றுமதியை அதிகரிக்கவும் தனது நாணயத்தில் வர்த்தகத்தை மேற்கொள்ளவும் தயாராகி விட்டது. அதனை செயல் வடிவமாக்கவும் இந்தோ – பசுபிக் கட்டமைப்பை வலுப்படுத்தவும் இந்தியாவின் நட்புறவை அயல் நாடுகள் மத்தியில் சமூகமாக்கவும் திட்டமிடுகிறது. இலங்கைத் தீவுக்கு வழங்கிய நிதி உதவியின் அடிப்படையில் நட்புறவை வலுப்படுத்த முடியுமென வெளியுறவு கருதுகிறது.

இந்தியா பற்றிய இலங்கைத் தீவின் பார்வை மாறியுள்ளதாகவும் இந்திய வெளியுறவு குறிப்பிட்டு உரைகிறது. அதனை இலங்கைக்கு விஜயம் செய்யும் மக்கள் உணர முடியுமெனவும் கருத்துக் கூற முனைகிறது. இவ்வாறு எத்தனை தடவை இந்தியாவை தென் தமிழ் தரப்பு அதனை இந்தியாவுக் கூடாக மேற்கொள்ள முடியும் என்ற பிரமையை வெளிப்படுத்திவருகின்றனர். ஈழத்தமிழரது அரசியல் பிரச்சினைக்கு தீர்வுகாண இந்தியா உதவும் என்ற நம்பிக்கையை அதிகம் வளர்க்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தியாவோ ஈழத் தமிழரது இனப்பிரச்சினைக்கு பொருளாதார அபிவிருத்தியை கருத்தில் கொள்வதுடன் வடக்கு கிழக்கில் பொருளாதார அபிவிருத்தியையே தற்போது முதன்மைப்படுத்தி வருகிறது. ஆனால் ஈழத்தமிழரது பிரச்சினை அரசியல் சார்ந்ததென்பதுடன் அதுவே முதன்மையானதும். அரசியல் பிரச்சினை தீர்க்கப்படுமாயின் பொருளாதாரமும் சமூக கட்டமைப்பும் விருத்தியடைவதுடன் வடக்கு கிழக்கின் இருப்பு மீதான தென் இலங்கையின் ஆதிக்கமும் முடிவுக்கு கொண்டு வர வாய்ப்பு ஏற்படும்.

ஜனநாயகத்தை ஏற்படுத்துவதனாலோ, மனித உரிமைகளை நிலைநாட்ட முயல்வதனாலோ, பொருளாதாரத்தை விருத்தி செய்வதனாலோ எந்த மாற்றமும் ஈழத்தமிழரது அரசியலில் ஏற்படப் போவதில்லை. கடந்த 14 ஆண்டுகளாக அனைத்து முயற்சிகளும் அத்தகைய நோக்குநிலையிலேயே உருவாகட்கப்பட்டது. ஆனால் நடைமுறையில் அத்தகைய முயற்சிகளால் ஈழத்தமிழர் எந்த நலனையும் அடையவில்லை. மாறாக முரண்பாடும் பகைமையும் அதிகரித்ததுடன் தென் இலங்கையின் ஆக்கிரமிப்பு மத, மொழி, பண்பாட்டு ரீதியாக அதிகரித்துள்ளதாகவே தெரிகிறது.

ஈழத்தமிழரது அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சியை இந்தியா முன்னெடுப்பதே தேவையான விடயமாகும். காரணம் வடக்கு கிழக்கை பொருளாதார விருத்தியாக நோக்கும் முயலும் போது ஈழத்தமிழர் இடப்பெயர்வும் புலம்பெயர்வும் அதிகரிக்க வாய்ப்பு உருவாகும். இது வடக்கு கிழக்கை படையிலான தகைமையைத் தவிர அனைத்தையும் இந்தியா இழக்க நேரிடும். இந்தியா இலங்கைத்தீவை இழந்தால் இந்து சமுத்திரத்தை இழக்க நேரிடும். தற்போது கூட அத்தகைய சவாலுக்குள்தான் இந்தியாவினது இந்துசமுத்திரம் பற்றிய நிசையுள்ளது. இதை இந்தியா தவிர்க்க வேண்டுமாயின் பொருளாதார அபிவிருத்தியை இலக்காகக் கொள்ளாது ஈழத்தமிழரது அரசியல் பிரச்சினைக்கு தீர்வை எட்டுவதற்கான அழுத்தங்களை தென் இலங்கை மீது பிரயோகிக்க வேண்டும். தற்போதுள்ள நிலை சாதகமானது. ஈழத்தமிழரது நலனும் தேவையும் இனப்பிரச்சினைக்கான தீர்வு மட்டுமே. அதற்கான வாய்ப்புக் கிடைக்குமாக அமைந்தால் பொருளாதார அபிவிருத்தியையும் சமூக பாதுகாப்பையும் ஈழத்தமிழரது நலனையும் அவர்களது அரசியல் கட்டமைப்பு சாத்தியப்படுத்தும். அது இறைமை பொருந்திய வடக்கு கிழக்கை கட்டமைக்கும். அரசியல் அதிகாரம் முதன்மையானதாக சாத்தியப்படும் போது பொருளாதார பலம் சாத்தியமாகும்.

அரசியல் அதிகாரமற்ற பொருளாதார கட்டுமானம் அனைத்தும் தென் இலங்கைக்கு சேவகம் செய்வதாகவே அமையும். 1983ஆம் ஆண்டு யூலைக் கலவரம் ஈழத்தமிழருக்கு தந்த பாடமே அதுவாகும். அதாவது அரசியல அதிகாரமின்மையால் பொருளாதாரத்தை பாதுகாக்க முடியாது ஏற்பட்டது. அதனையே மீளவும் ஏற்படுத்தும். 1983இல் அது தென் இலங்கையை மையப்படுத்தி ஏற்பட்டது. இனி வடக்கு கிழக்கை மையப்படுத்தி ஏற்படும். அது கலவரமாக அமைந்தது. இனக் கலவரமாக அமையும். அமைதியாக அரங்கேறும்.

இரண்டாவது, இந்திய வெளியுறவு அயலக உறவை விஸ்தரிக்க திட்டமிடுகிறதே அன்றி இலங்கைத்தீவு போன்று இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் இலங்கை கையாண்டதென்ற வரலாறு பதிவு செய்யப்பட்டுள்ளது. பின்னர் ஓய்வு நிலையில் தென் இலங்கை அரசியல் தலைவர்களும் இராஜதந்திரிகளும் இந்தியாவை ஏமாற்றி விட்டார்கள் என நூல் ஒன்றை எழுத முனையலாம். வேறு எந்த வாய்ப்பும் ஈழத்தமிழருக்கு சாத்தியமாகப் போவதில்லை.

இந்தியாவின் முதல் பிரதமர் ஜவகர்லால் நேரு முதல் அத்தகைய அனுபவம் பதிவு செய்யப்படுகிறது. ஆனால் எத்தகைய மாற்றமும் நிகழவில்லை. இலங்கை – இந்திய ஒப்பந்தமும் 13 வது திருத்தச் சட்டமூலமும் அதே அனுபவத்தை தந்தது. ஆனால் ஏனையவற்றை விட 13 வது திருத்தத்தால் இந்தியா மீளமுடியாத நிலைக்குள் அகப்பட்டுள்ளது. இந்தியா மட்டுமல்ல ஈழத்தமிழரும் அதற்குள் அடங்குவார்கள்.

எனவே இந்தியாவின் போக்கினை ஈழத்தமிழர்கள் நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும். தமிழ் அரசியல் தலைவர்களும் இந்தியா பொறுத்த நகர்வுகளை மேற் கொள்ளும் சந்தர்ப்பத்தில் பலவீனமாக உரையாடல்களை தவிர்க்க வேண்டும். இந்தியா பிராந்திய பாதுகாப்பையும் பொருளாதார அபிவிருத்தியையும் முதன்மைப்படுத்த முனைகிறதே அன்றி ஈழத்தமிழர் சார்ந்து எந்த முடிவையும் கவனத்தில் கொள்ளவில்லை என்றே தெரிகிறது.


இலங்கைத்தீவுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை ஈழத்ததமிழருக்கு வழங்கவில்லை என்பதை இரு இராஜதந்திரிகளும் வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்தியா எழுச்சி பெறும் சக்தியாக மாறுகிறதென்பதைக் கடந்து அத்தகைய எழுச்சியானது ஈழத்தமிழருக்கு பொருளாதார அபிவிருத்தியையே கொடுக்கப் போகிறதென்ற உண்மையை இருவரது வெளிப்படுத்துகையும் உணர்த்துகின்றது.

# கலைஞர் கருணாநிதி விட்டுச் சென்ற அரசியல் பாரம்பரியம் என்ன?

முரளிதரன் காசிவிஸ்வநாதன்

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதியின் நூறாவது ஆண்டு இது. தனது நீண்ட அரசியல் பயணத்தில் தமிழ் அரசியல் களத்தில் அவர் விட்டுச் சென்ற முக்கியமான தாக்கம் என்ன என்பதை ஆராய்கிறது இந்தக் கட்டுரை.



இந்திய அரசியல் களத்தில் அவ்வப் போது நிகழக்கூடிய பரபரப்பான திருப்பங்களின் போது, சமூக வலைதளங்களில் அடிக்கடி எழுதப்படும் வார்த்தை, 'கருணாநிதி இருந்திருந்தால் என்ன செய்திருப்பார் தெரியுமா?' என்பது தான். அவர் மறைந்து ஐந்தாண்டு களாகப் போகிறது. இருந்தபோதும், தமிழக அரசியல் அரங்கில் பல தருணங்களில் திரும்பத்திரும்ப நினைவு கூரப்படுகிறார் மு.கருணாநிதி.

1938 பிப்ரவரி 27ல் காஞ்சிபுரத்தில் நடந்த முதல் இந்தி எதிர்ப்பு மாநாட்டிற்குப் பிறகு, இந்தி எதிர்ப்புக் குரல் மாநிலம் முழுவதும் பரவியது. திருவாரூரிலும் அதன் எதிரொலியைக் கேட்டு, அரசியல் களத்தில் இறங்கிய கருணாநிதி, 2016 ஆம் ஆண்டின் இறுதியில் உடல்நலக் குறைவால் தனது செயல்பாடுகள் முடங்கும் வரை திராவிட அரசியலின் ஆணிவேராக நீடித்து நின்றார்.

கிட்டத்தட்ட முக்கால் நூற்றாண்டுக்கு மேல் நீடித்த தனது அரசியல் பயணத்தில் சட்டமன்ற உறுப்பினராக, அமைச்சராக, முதலமைச்சராக அவர் ஏற்படுத்திய தாக்கமும் எழுப்பிய உரிமைக் குரல்களும், அவர் மறைந்து பல ஆண்டுகளுக்குப் பிறகும் அவரது வெற்றிடத்தை உணர வைக்கின்றன.



எழுத்தாளர், பத்திரிகையாளர், பேச்சாளர், நாடக ஆசிரியர், திரைக்கதை எழுத்தாளர், அரசியல் தலைவர் என பல களங்களில் செயல்பட்டவர் மு. கருணாநிதி. முதலமைச்சரான பிறகு மு. கருணாநிதி நடைமுறைப்படுத்திய சமூக நலத் திட்டங்கள், உருவாக்கிய புதிய கட்டமைப்புகள், மக்களுக்கான சலுகைகள், இலவசங்கள் ஆகியவற்றை விட அதிகாரத்திற்கு வருவதற்கு முன்பும் வந்த பிறகும் நடத்திய போராட்டங்களுக்காகவே எப்போதும் நினைவுகூரப் படுவார்.

1953ஆம் ஆண்டில் திருச்சிக்கு அருகில் உள்ள கல்லக்குடி என்ற கிராமத்தின் ரயில் நிலையத்தின் பெயரை டால்மியாபுரம் என்று மாற்ற மத்திய அரசு முடிவெடுத்தது. இதனை வட இந்திய மேலாதிக்கமாகக் காட்ட ஒரு பெரிய போராட்டத்தை நடத்த முடிவெடுத்த தி.மு.க., அந்தப் போராட்டத்தின் தலைவராக மு. கருணாநிதியை அறிவித்தது. இதில் அவருக்கு ஐந்து மாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப் பட்டது.

இதற்குப் பிறகு 1965ல் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று, தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, ஆறு மாத கடுங்காவல் சிறை தண்டனையைப் பெற்றார். இந்த சம்பவத்தை தனது அரசியல் வாழ்க்கையில் திருப்பு முனையாகக் குறிப்பிடுகிறார் கருணாநிதி.

இதற்குப் பிறகு நெருக்கடி நிலை காலகட்டத்தில், ஒரு முதலமைச்சராக இருந்தபடி மத்திய அரசை அவர் தொடர்ந்து எதிர்த்து வந்ததும், ஜார்ஜ் ஃபெர்னான்டஸ் உள்ளிட்ட பாதுகாப்புக் கோரி வந்த தலைவர்களுக்கு அடைக்கலம் கொடுத்ததும் அவரது அரசு கலைக்கப்பட காரணமாக அமைந்தன. இதற்குப் பிறகு, பல சோதனைகளுக்கு நடுவில் 13 ஆண்டுகள் கட்சியை சிதறாமல் வழி நடத்தி, மீண்டும் தி.மு.க. ஆட்சியைப் பிடிக்க வழி வகுத்தார் கருணாநிதி. இந்த போராட்ட குணம் தான் கருணாநிதியின் முக்கிய அடையாளம்.

முதலமைச்சர் அண்ணா மறைந்த போது, திராவிட இயக்கத்தையும் தாண்டிய பேரிழப்பாக அமைந்தது. இருந்தாலும், அந்த இழப்பு தெரியாதபடி ஏழைகளுக்கும் சாமானியர்களுக்கும் ஆதரவான, மதவாதத்திற்கு எதிரான அண்ணாவின் கொள்கைகளின் அடிப்படையில் தனது கட்சியையும் ஆட்சிகளையும் வழிநடத்தினார் மு. கருணாநிதி.

மு. கருணாநிதி செயல்படுத்திய சமூக நலத் திட்டங்களைத் தாண்டி, அவர் வேறு ஒரு முக்கியமான விஷயத்திற்காக நினைவுகூரப்பட வேண்டியவர் என்கிறார் Karunanidhi: The definitive biography நூலின் ஆசிரியரும் மூத்த பத்திரிகையாளருமான வாஸந்தி. 'தற்போதைய சூழலில் அவர் மிகவும் தேவைப்படுகிறார். காரணம், 'மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி' என்பதை முதலில் வலியுறுத்தியவர் அவர் தான். ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே மாதிரியான கல்வி என்ற குரல்கள் ஒலிக்கும் இந்த நேரத்தில் கருணாநிதியின் மாநில சுயாட்சிக் குரல் மிக முக்கியமானது. இந்த ஒரு விஷயத்திற்காக அவர் நிச்சயம் என்றென்றும் நினைவு கூரப்படுவார்.

கூட்டாட்சி என்பது எவ்வளவு முக்கியம் என்பதை சரியாகப் புரிந்து கொண்டவர் கருணாநிதி. தமிழ்நாட்டில் இந்தத் தத்துவம் சரியாக புரிந்து கொள்ளப்பட காரணம், அவர் போட்ட அடித்தளம்தான்' என்கிறார் வாஸந்தி.

இந்தியாவில் உண்மையான கூட்டாட்சி அமைவதில் மு. கருணாநிதி தொடர்ந்து ஆர்வம் காட்டினார். 1969ல் முதல்வராகப் பதவியேற்ற உடனேயே மத்திய மாநில அரசுகளின் அதிகாரங்களைப் பகிர்வது குறித்து ஆராய, நீதிபதி ராஜமன்னார் தலைமையில் ஒரு குழுவை அமைத்தார். 1971ல் அந்தக் குழு அளித்த பரிந்துரைகள் இப்போதும் கவனிக்கத்தக்கவையாக, தற்போது இந்தியாவில் பா.ஜ.க. அல்லாத மாநிலங்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளுக்குத் தீர்வாக இருக்கின்றன.

வாஜ்பாயி பிரதமராக இருந்த போது 2002ஆம் ஆண்டு நீதிபதி வெங்கடாச்சலையா தலைமையிலும் மன்மோகன் சிங் பிரதமராக இருந்தபோது 2010ல் நீதிபதி பூஞ்ச் தலைமையிலும் மத்திய - மாநில உறவுகள் பற்றி ஆராய குழுக்கள் அமைக்கப்பட்டன.இதன் பின்னணியில் தி.மு.கவின் அழுத்தம் இருந்தது.

மாநிலங்கள் சமமான கூட்டாளியாக கருதப்படும் வகையில், அரசியலமைப்புச் சட்டத்தில் மாற்றம் வேண்டும் என்பது தி.மு.கவின் கோரிக்கைகளில் ஒன்று. நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க மத்திய அரசு யோசிப்பதாக கூறப்படும் நிலையில் கூட்டாட்சி தொடர்பாக கருணாநிதி முன் வைத்த சில கருத்துகள், இப்போதும் கவனிக்கத்தக்கவையாக உள்ளன. 1970ல் நடந்த தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் பேசிய மு. கருணாநிதி, மாநிலங்களவையைப் பொறுத்த வரை எல்லா மாநிலங்களில் இருந்தும் சமமான எண்ணிக்கையில் உறுப்பினர்களை அனுப்ப வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

அம்மாதிரியான ஒரு ஏற்பாடு இந்தியாவில் தற்போது சாத்தியமில்லாத நிலையில், பல மாநிலக் கட்சிகளும் பிரதானமாக இடம்பெறக் கூடிய கூட்டணி அரசை அமைப்பதில் தி.மு.க. தொடர்ந்து ஆர்வம் காட்டியது. 80களின் இறுதியில் உருவான தேசிய முன்னணி, 1996ல் உருவான ஐக்கிய முன்னணி ஆகியவற்றை உருவாக்குவதில் முக்கியப் பங்கு வகித்ததன் மூலம், தனது கூட்டாட்சிக் கனவை சற்று ஆற்றிக் கொண்டார் மு. கருணாநிதி.

மாநிலங்களுக்கென தனியாகக் கொடி வேண்டும் எனப் பேசிய கருணாநிதி, அதில் முடிவெடுக்கப்படாத நிலையில், சுதந்திர தினத்தன்று முதலமைச்சர்களுக்கு கொடியேற்றும் அதிகாரம் வேண்டுமென வலியுறுத்தினார். அதனைப் பிரதமர் இந்திரா காந்தி ஏற்றதாலேயே இப்போது இந்தியா முழுவதும் மாநில முதல்வர்கள் சுதந்திர தினத்தன்று கொடியேற்றுகின்றனர்.

திராவிடமாடல் என்ற ஆட்சி முறையை தற்போதைய தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் முன்வைத்துப் பேசுகிறார். ஆனால், இந்த திராவிட மாடலின் பெரும் சாதனைகளாகக் குறிப்பிடப்படுபவனவற்றில் மு. கருணாநிதியின் பங்கு மிகக் கணிசமானது.

கை ரிக்ஷாக்களை ஒழித்தது, குடிசைகளில் வசிப்போருக்கு வீடுகளைக் கட்டி அளிப்பதற்காக குடிசை மாற்று வாரியத்தை உருவாக்கியது, அரசு நிகழ்ச்சிகளின் துவக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடச் செய்தது, பிற்படுத்தப்பட்டோருக்கென தனி அமைச்சரவையை உருவாக்கியது, நில உச்ச வரம்புச் (22ம் பக்கம் பார்க்க)



# நிராகரிக்கப்பட்ட அரசியலில் தப்பிப் பிழைத்தல்

கட்டுரையாளர்
கொழும்பில் இருந்து
- சி.சிவகுமாரன் -



இலங்கையில் இனம், மதம் ,மொழிக்கு எதிராக இடம்பெறும் எந்தவொரு சம்பவத்தின் பின்னாலும் ஒரு இரும்புக் கரமும் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலும் இருக்கும் என்பதை மறுப்பதற்கில்லை. அண்மைக்காலமாக இடம் பெற்று வரும் சம்பவங்கள் மக்கள் மத்தியில் சந்தேகங்களை ஏற்படுத்தி வருகின்றன.

குறிப்பாக பௌத்த மதத்தை விமர்சிக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்டு வரும் சம்பவங்களைக் கூறலாம். மேற் கூறிய சம்பவங்கள் அரசை வீழ்த்த முன்னெடுக்கப்பட்டு வரும் சதி என ஜனாதிபதி அலுவலகப் பிரதானி சாகல ரத்னாயக்க தெரிவித்துள்ளமை முக்கிய விடயமாகும்

இந்த சர்ச்சைகளுக்கு மத்தியில் பத்தர முல்ல பகுதியில் கண்ணாடி பெட்டிக்குள் வைக்கப்பட்ட புத்தர் சிலை ஒன்று கவிழ்க்கப்பட்ட சம்பவம் எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்துள்ளது.

மத நல்லிணக்கத்தை சீர்குலைத்து மக்களை பிளவுபடுத்துவதற்கு நாட்டின் பல இடங்களில் சில குழுக்கள் இயங்கி வருவதாகவும் இதற்கெதிராக நடவடிக்கை எடுக்க ஜனாதிபதி விசேட பொலிஸ் பிரிவை நிறுவ உத்தேசித்துள்ளதாகவும் சாகல கூறுகிறார்.

இதற்கு முன்னர் இந்த நாட்டில் மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையில் ஒரு சம்பவமும் இடம்பெறவில்லையா என பலரும் ஆச்சரியமாக புருவங்களை உயர்த்தும் செய்தியாகத் தான் இது உள்ளது. பொதுபலசேனாவின் ஞானசார தேரரையும் மட்டக்களப்பு மங்கலராமய விகாரதிபதியையும் விட இங்கு நல்லிணக்கத்தை சீர் குலைக்கும் வகையில் மோசமாக வேறு எவரும் நடந்து கொண்டார்களா என்ன?

ஒரு அயோக்கியனின் இறுதி புகலிடம் தேசபக்தி என்பது சமுவேல் ஜோன்சனின் புகழ் பெற்ற வார்த்தைகள். எனினும் ஒரு அயோக்கியனில் இறுதித் தெரிவு அரசியல் என ஜோர்ஜ் பெர்ணாட்ஷா பின்னாட்களில் கூறினார். ஆனால் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் அரசியலில் தப்பிப்பிழைத்தல் என்பது சவாலுக்குரியது. அதற்கு அவர்கள் மக்களை உணர்வுபூர்வமாக அணுகுவதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய முடியாது.

இலங்கையைப் பொறுத்தவரை மதம் மற்றும் மொழிகளை வைத்து செய்யும் அரசியலில் மக்களை இலகுவில் ஈர்த்து விடலாம். பௌத்தத்துக்கும் சிங்கள மொழிக்கும் ஆபத்து என வீதியில் போகும் யாராவது கூறினாலும் அவரை பெரிய மனிதராக்கி விடுவர் சிங்கள பௌத்த மக்கள்.

இடம் பெற்று வரும் சம்பவங்களைப் பார்க்கும் போது மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு சில அரசியல்வாதிகள்

தமது இருப்பை தக்க வைக்க இப்போது மதங்களை கையிலேடுத்திருக்கின்றனரோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது. ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் கூட ஒரு அரசியல் இருப்புக்கான அல்லது ஒரு புதிய ஆரம்பத்துக்காக கட்டமைக்கப்பட்ட ஒரு சம்பவமாகவே இன்னும் இலங்கை மக்கள் மனதில் பதிந்து நிற்கின்றது. ஆனால் மதங்களைப் பற்றி பேசுதல் என்பது கருத்து வெளியிடும் சுதந்திரத்தின் ஒரு வெளிப்பாடு என்ற சில குரல்களும் இப்போது எழுந்துள்ளமை ஆச்சரியமளிக்கின்றது.

இலங்கையில் ஊடகவியலாளர்கள் மாத்திரமே கருத்து வெளியிடும் சுதந்திரம் பற்றி அதிகம் கதைக்கும் வர்க்கத்தினராக ஒரு காலத்தில் விளங்கினர். யுத்த கால செய்தி அறிக்கையிடலின் போதும் அதன் பிறகு அரசாங்கத்தின் ஊழல்கள் அலட்சியப் போக்குகள் குறித்தும், நெருக்கடி காலகட்டங்களில் மக்கள் நலன் சார்ந்த தகவல்களை வெளியிடும் போதும் ஊடகங்களின் குரல்கள் நசுக்கப்படுவது இந்த நாட்டில் வாடிக்கையானதொன்றாக விளங்கியது. அந்த சந்தர்ப்பங்களில் இந்த கருத்து வெளியிடும் சுதந்திரத்தை முன்வைத்து ஆர்ப்பாட்டங்கள் ,கவனஈர்ப்பு செயற்பாடுகள் ஊடக அமைப்புகளால் அடிக்கடி முன்னெடுக்கப்பட்டு வந்தன. கருத்து வெளியிடும் சுதந்திரம் என்பது ஊடக நிறுவனங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் மாத்திரமே சொந்தமானது என்ற கருத்தும் அக்காலகட்டத்தில் பரவலாக இருந்தது.

யுத்தம் முடிவுக்கு வந்த பிறகு, கருத்து வெளியிடும் சுதந்திரம் பற்றி அரகலய காலத்தில் அதிகமாகவே பேசப்பட்டது. இந்த சுதந்திரத்தை அதிகமாக அப்போதைய காலகட்டத்தில் பயன்படுத்தியவர்கள் சிங்களவர்களாவர். தாம் தெரிவு செய்த அரசாங்கத்துக்கு எதிராகவே அவர்கள் பேசத் தொடங்கியதால் அவர்களை யாரும் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் இருக்கவில்லை. சில சந்தர்ப்பங்களில் வடக்கு கிழக்கு யுத்தம், விடுதலைப் புலிகள், தமிழர்கள் பற்றியும் அவர்கள் அதிகமாகவே தமது கருத்துக்களை சுதந்திரமாக முன் வைத்தனர்.

அரகலயவுக்குப் பிறகு போராட்டக்காரர்கள் மீது முன்னெடுக்கப்பட்ட அடக்கு முறை காரணமாக மீண்டும் இந்த கருத்து வெளியிடும் சுதந்திரம் பற்றி கேள்வியெழுப்பப்பட்டது.

ஆனால் இப்போது அப்படியல்ல. சில அரசியல்வாதிகளும் தமது கருத்து வெளியிடும் சுதந்திரம் பற்றி கதைக்கின்றனர். கடந்த காலங்களில் இவ்வாறானவர்களே ஊடகங்களின் குரல்களை நசுக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டவர்களாக இருந்தனர். இதை விட நாட்டின் அமைதியான சூழலை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளும் தீவிர மதவாதிகளும் தமது கருத்து வெளியிடும் சுதந்திரம் பற்றி வாய் திறந்துள்ளனர்.

எந்த மதத்தையும் பின்பற்றும் உரிமை இருக்கும் போது மதங்களைப் பற்றி கதைக்கும் விமர்சிக்கும் உரிமையும் ஏன் இருக்கக் கூடாது, என்பதே இவர்களின் வாதமாக உள்ளது. ஆனால் இவர்கள் இந்த நாட்டில் பௌத்த மதத்தைத் தவிர வேறு எந்த மதங்களையும் தாராளமாக விமர்சிக்கலாம் என்பதை அறிந்து கொள்ளல் நல்லது. மதபோதகர் ஜெரோமுக்கு எதிராக ஆரம்பித்த இந்த மத நிந்தனை சர்ச்சைகள் அதன் பிறகு நகைச்சுவை கலைஞர் நடாஷா மற்றும் ராஜாங்கனை சத்தாரன தேரர் ஆகியோரின் கைதுகளோடு பரபரப்புகளை ஏற்படுத்தியுள்ளன. அநேகமாக போதகர் ஜெரோம் நாடு திரும்பியதும் அவரும் கைது செய்யப்படலாம். எந்த சந்தர்ப்பத்தில் எதை கதைக்க வேண்டும் என்ற வரையறைகளும் கட்டுப்பாடுகளும் இந்த நாட்டின் அரசியல்வாதிகளுக்கு இல்லை. ஆனால் எப்போதாவது கதைக்கப்பட்ட ஒரு விடயத்தை தமக்கு சாதகமாக்கிக் கொள்ள கைதுகளை மேற்கொள்ளும் அதிகாரங்களை இந்த நாட்டின் அரசியல் கொண்டுள்ளது. போதகர் ஜெரொமும் நகைச்சுவை கலைஞர் நடாஷாவும் திட்டமிட்ட வகையில் பௌத்த மதத் தைப் பற்றி கதைக்கவில்லையென்பது ஒரு சாராரின் கருத்து. மேலும் போதகர் ஜெரோமின் சர்ச்சைக்குரிய கருத்துக் களை விட, இப்போது அவரது பின் னணி குறித்தே பெரிதும் ஆராயப்படு கின்றது. ஆடம்பரமாக தேவாலயம் ஒன்றை அமைப்பதற்கு அவருக்கு எவ்வாறு பணம் கிடைத்தது என்பதே இப்போது அவர் குறித்த தேடலில் பிரதானமாக உள்ள விடயமாகும். போதகர் ஜெரோம் மற்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுக்குமிடையிலான தொடர்புகள் பற்றியும் இக் காலகட்டத்தில் பேசப்பட்டமை முக்கிய விடயம். ஆனால் திடீரென அந்த சம்பவங்களை மறைக்கும், மறக்கும் முகமாகவே பௌத்த மதத்துக்கு எதிராக வேறு சில சம்பவங்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. போதகர் ஜெரோம் மற்றும் நடாஷாவிற்கு எதிராக சட்டம் தன் கடமைகளை செய்த அதே வேளை மிக பாரதூரமான மதவாத கருத்துக்களை கூறி வரும் கடும்போக்கு பௌத்த பிக்குகளின் மீதும் சட்டம் பாய வேண்டும் என்ற ஏனைய மத உணர்வாளர்களை சாந்தப்படுத்தத் தான் ராஜாங்கனை தேரர் கைது செய்யப்பட்டாரா என்ற சந்தேகம் நியாயமானது.

எனினும் இந்த மத விமர்சன சம்பவங்களும் கைதுகளும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சவாலானவை. அரசியல் ரீதியாக அவரது நகர்வுகளை எதிர்க்க முடியாதவர்கள் மத விவகாரத்தை கையிலெடுத்திருக்கின்றார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளதை சாகல ரத்னாயக்கவின் கருத்து வெளிப் படுத்தி நிற்கின்றது.

நல்லாட்சி காலத்தில் ஏற்பட்ட ஈஸ்டர் குண்டுத்தாக்குதலும் அதற்குப்பிறகு ஏற்பட்ட ஆட்சி மாற்றங்களும் இந்த சம்பவங்களின் தீவிரத்தை உணர்த்தி நிற்கின்றன. ஆனால் மீண்டும் அவ்வாறான சம்பவங்களின் ஊடாக அரசியல் செய்வதற்கு திரைமறைவில் சில கறை படிந்த கரங்கள் முயற்சி செய்கின்றன என்றால் அதற்கும் நாட்டு மக்கள் சரியான பதிலடி கொடுப்பதற்கு தயாராகவே இருக்கின்றனர் என்பதை உரியோர் அறிந்து கொள்வது அவசியம்.

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# ரணிலுடன் பேசுதல்?

கட்டுரையாளர்
திருமலையில் இருந்து
- யசீந்திரா -



தமிழ் கட்சிகள் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசி வருகின்றன. ரணிலுடன் பேசுவது தமிழ் கட்சிகளை பொறுத்தவரையில் புதிய விடயமல்ல. மைத்திரிபால அரசாங்கத்திலும் ரணிலுடன் பல சுற்றுப் பேச்சுக்களில் தமிழ் கட்சிகள் ஈடுபட்டிருந்தன. புதிய அரசியல் யாப்பொன்றை கொண்டுவர முடியுமென்றும் தமிழ் கட்சிகள் குறிப்பாக இராஜவரோதயம் சம்பந்தன் அப்பாவித்தனமாக நம்பிக் கொண்டிருந்தார். அந்த அடிப்படையில் சம்பந்தன் தலைமையில் பேச்சுக்கள் இடம் பெற்றன. இறுதியில் வழமை போல் வெறுங்கையுடன் திரும்பினர்.

ரணில் தந்திரமான அரசியல்வாதியென்று பெயரெடுத்த ஒருவர். ரணில், அவரது மாமனார் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவிடமிருந்து அரசியலை கற்றுக் கொண்டவர். தமிழ் சூழலை பொறுத்த வரையில் ரணிலை நரியென்று கூறுவதுண்டு. அதுவும் கூட ஜே.ஆரின் அரசியல் வழியாக வந்த ஒன்று தான். ஜே.ஆர் ஜெயவர்த்தனவை பழைய நரியென்பார்கள். சிங்கள ராஜதந்திரத்திடம் தமிழர்கள் தோற்றுப் போகும் சந்தர்பங்களிலேயே, இவ்வாறான நரிக் கதைகள் தலை நீட்டுவதுண்டு. ரணில் நரியாக இருப்பது அவரது கெட்டித்தனம் ஆனால், தமிழர் பக்கத்தில் நரியாக சிந்திக்கக் கூடாதென்று எந்த நிபந்தனைகளும் நமக்கில்லை தானே!

இப்போது ஜனாதிபதியாக இருக்கும் ரணில், எவ்வாறானதொரு சூழலில் ஜனாதிபதியானார் என்பது தொடர்பில் மீண்டும் பேச வேண்டியதில்லை. நாட்டில் மோசமானதொரு பொருளாதார நெருக்கடியேற்பட்டதன் காரணமாகவே, ரணில் ஜனாதிபதி கதிரையில் அமர முடிந்தது. இல்லாவிட்டால் ரணில் ஜனாதிபதியாக ஒரு போதுமே வந்திருக்க முடியாது.

இந்த பின்புலத்தில் நோக்கினால் 2015 ஆட்சி மாற்றத்தின் மூலம் அதிகாரம் மிக்க பிரதமராக இருந்த ரணில் அல்ல இப்போதிருக்கும் ரணில் விக்கிரமசிங்க. இந்தப் பின்புலத்தில் நோக்கினால், அரசியலில் காணாமல் போன ஒருவர், மீளவும் நிரந்தரமாக நிமிர்வதற்கான காய்களை நகர்த்திக் கொண்டிருக்கின்றார். தனது காய்நகர்த்தல்களுக்கு மற்றவர்களை கையாள முயற்சிக்கின்றார்.

இந்த பின்புலத்தில் சிந்தித்தால், முன்னர் ரணிலுடன் பேசியதற்கும், இப்போது ரணிலுடன் பேசுவதற்குமிடையில் பெரிய வேறுபாடுண்டு. இதனை புரிந்துகொண்டுதான் ரணிலுடனான பேச்சுவார்த்தை தொடர்பில் கருத்துக்களை முன் வைக்க வேண்டும். இப்போதுள்ள ரணில் எதேச்சையாக கிடைத்த கதிரையில், மீண்டுமொரு முறை, மக்கள் ஆதரவுடன் அமருவதற்கான தந்திரம் தொடர்பில் மட்டுமே சிந்தித்துக் கொண்டிருப்பவர்

அதற்கு என்ன செய்யலாம் என்பது தான், ரணிலை பொறுத்தவரையில் முதன்மையான விடயமாகும். அதற்கு எதையெல்லாம் செய்யக் கூடாதென்பது தான் அடிப்படையான விடயமாகும். ரணில் மீண்டும் ஜனாதிபதியாவதற்கு நிச்சயம் தமிழ் மக்களின் ஆதரவும் தேவை. இவ்வாறானதொரு சூழலில் தான், தமிழ் கட்சிகளுடன் ரணில் பேசி வருகின்றார். முதலில் வடக்கு மாகாண மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் பேசப் போவதாக அறிவித்தார். இவ்வாறு கூறினால், தமிழ் கட்சிகள் தங்களின் எதிர்ப்பை வெளியிடுமென்று தெரிந்து கொண்டே, அவ்வாறு கூறினார். பின்னர் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வை காணப் போவதாக கூறினார்.

இதனைத் தொடர்ந்து, 13வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தப் போவதாக கூறினார்.

ஒவ்வொரு விடயங்களையும் கூறிவிட்டு, அது தொடர்பான எதிர்வினைகளை குறித்துக் கொண்டார். இவை அனைத்துமே நன்கு திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்ட விடயங்களாகும். ஏனெனில் ரணில் விக்கிரமசிங்க தமிழ் அரசியல்வாதிகள் தொடர்பிலும் தமிழ் அரசியல் சூழல் தொடர்பிலும் போதிய அனுபவமும் அறிவும் கொண்ட ஒருவர். எனவே ரணில் விடயங்களை புரிந்துகொள்ளாமல் பேசுகின்றார் என்று எவரேனும் எண்ணினால், அவ்வாறானவர்கள் நிச்சயம் அரசியலில் கற்றுக் குட்டிகளாகவே இருப்பர்.



ரணிலுடன் தமிழ் கட்சிகள் பேசி வருவதாக கூறிவரும் சூழலில், தமிழ் அரசியல் தரப்புக்கள் எவ்வாறான நிலையிலிருக்கின்றன? உள்ளூராட்சி தேர்தல் அறிவிப்பை தொடர்ந்து, விடயங்களை ஆராயாமல் அவசரப்பட்டு, தமிழரசு கட்சி தனியான போட்டி அறிவிப்பை வெளியிட்டது. ஆனால் உள்ளூராட்சி தேர்தல் நடைபெறவில்லை. இந்த விடயங்களை சுமந்திரனாலோ அல்லது சம்பந்தனாலோ முன்கூட்டியே கணிக்க முடியவில்லை.

நடைபெறாத ஒரு தேர்தலை முன்வைத்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு பிளவடைந்தது. இந்த பின்புலத்தில் அதுவரையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களாக (பல்வேறு முரண்பாடுகள் இருந்த போதிலும் கூட) விடயங்களை அணுகியவர்கள் பின்னர், தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என பிளவுற்றனர். இவ்வாறு பிளவுற்ற நிலையில் தான், ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசவும் சென்றனர்.

ரணில் விக்கிரமசிங்கவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு முக்கியத்துவம் கொடுப்பதான ஒரு தோற்றத்தை காண்பித்தார். ஆனால் ஒரு சிறிய விடயத்தில் கூட ரணில், கூட்டமைப்பின் தலைவர்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. வடக்கு மாகாண ஆளுனர் விடயத்தில் கூட, ரணில் விக்கிரமசிங்க, கூட்டமைப்பின் தலைவர்களின் கருத்துக்களை பொருட்படுத்தவில்லை. இது ஒரு சிறிய விடயம் ஆனால் இவ்வாறானதொரு விடயத்தில் கூட, தமிழ் கட்சிகளின் தலைவர்களை பொருட்படுத்தாதவர், எவ்வாறு தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில், இந்தக் கட்சிகளின் கருத்துக்களை செவிமடுப்பாரென்று எதிர்பார்க்கலாம்? விடயங்களை ஆழமாக நோக்கினால், தமிழ் தலைவர்கள் என்போரை, ரணில் விக்கிரமசிங்க உண்மையிலேயே மதிக்கின்றாரா என்னும் கேள்வி எழுகின்றது.

ரணில் மட்டுமல்ல, கொழும்பில் அதிகாரத்திலுள்ள சிங்கள அரசியல்வாதிகள் எவருமே தமிழ் தலைவர்கள் என்போரை மதிக்கிவில்லை போன்றே தெரிகின்றது. இதற்கு யார் காரணம் சிங்கள அரசியல்வாதிகளா அல்லது தமிழ் அரசியல்வாதிகளா?

உண்மையில், ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசச் செல்வதற்கு முன்னர், தமிழ் கட்சிகளின் தலைவர்கள் என்போர் அனைவரும் (நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்கள் இல்லாதவர்கள் அனைவரும்) விடயங்கள் தொடர்பில் முதலில் தங்களுக்குள் பேசி, எதனை எவ்வாறு, முன்வைப்பதென்பதில் உறுதியானதொரு உடன்பாட்டிற்கு வந்திருக்க வேண்டும். ஆனால் அதனைச் செய்யவில்லை. இதன் காரணமாக இன்று என்ன நடந்திருக்கின்றது? தமிழ் தேசியம் பேசும் ஒரு கட்சியின் தலைவரான சவிக்கினேஸ்வரனின் ஏற்பாட்டில், மாகாண சபை தேர்தல் இடம்பெறும் வரையில் ஒரு ஆலோசனை சபையை நியமிக்கும் யோசனையை ரணிலிடம் ஒப்படைத்திருக்கின்றனர். (விக்கினேஸ்வரனின் அரசியல் அணுகுமுறை தொடர்பில் அவருடனிருப்பவர்களின் குறிப்பாக அவரின் மூலம் அரசியல் எதிர்காலத்தை தேடிக் கொண்டிருக்கும், மணிவண்ணன் போன்றவர்களின் நிலைப்பாடு என்னவென்று தெரியவில்லை)

இப்போது ரணில் அதனையே தான் செய்யவுள்ளதாக கூறுகின்றார். இதனையே ஊடகங்கள் இடைக்கால தீர்வு என்பதாக தவறாக விளக்கமளிக்கின்றன. இது இடைக்கால தீர்வல்ல. மாகாண சபை தேர்தல் இடம்பெறும் வரையில், ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஆலோசனை சபையொன்றின் மூலம், மாகாண சபை நிர்வாகத்தை முன்னெடுப்பதாகும். ஆனால் நாடு உள்நாட்டு யுத்தத்திற்குள் சிக்கியிருந்த காலத்தில் கூட, அவ்வாறானதொரு ஆலோசனை சபையின் மூலம் மாகாண சபை நிர்வாகம் முன்னெடுக்கப்படவில்லை.



தமிழ் அரசியல்வாதிகளால் அரசாங்கத்திற்கு நெருக்கடிகளை கொடுக்க முடியுமென்று சிங்கள அரசியல்வாதிகள் கருதவில்லை. அதற்கான ஆற்றலை தமிழ் அரசியல் தலைமைகள் இழந்து விட்டன என்றே அவர்கள் கருதுகின்றனர். இவ்வாறானதொரு நிலையில்தான், தமிழ் கட்சிகளுடன் ரணில் விக்கிரமசிங்க பேசி வருகின்றார். இவ்வாறான பேச்சுக்களின் போது, அனைத்து கட்சிகளின் தலைவர்களுக்கும் முறையாக அறிவிக்கப்படுவதுமில்லை. பேச்சுவார்த்தை தொடர்பில் இரண்டு நாட்களுக்கு முன்னதாக அல்லது முதல் நாளே அறிவிக்கப்படுகின்றது. ஒரு வேளை ஒரு கட்சியின் தலைவர் குறித்த அறிவிப்பின் போது, கொழும்பில் இல்லாவிட்டால் அவரால் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள முடியாது.

ஒரு தேசிய இனத்தின் பிரச்சினையை இவ்வாறுதான் பேசுவதா? இதற்கு யார் காரணம்? தமிழ் கட்சிகளின் தலைவர்களை இவ்வாறு அணுக முடியும் நாம் எவ்வாறு அணுகினாலும் கூட, சூடு சுறனையில்லாமல், அவர்கள் நாய் குட்டிகள் போன்று வருவார்களென்றா? கொழும்பின் அதிகாரபீடம் கருதுகின்றது? கொழும்பிலுள்ள தூதரகங்கள் குறிப்பாக அமெரிக்க தூதரகம் அதன் நிகழ்வுகளுக்காக அழைப்பு விடுக்கும் போது, அழைப்பிதழை இரண்டு வாரங்களுக்கு முன்பாகவே அனுப்பி, உறுதிப்படுத்துமாறு கோருகின்றது. உண்மையில் ஒரு நிகழ்விற்காக மற்றவர்களை அவ்வாறு தான் அழைக்க வேண்டும். ஆனால் தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் பேசுவதற்காக, தமிழ் மக்களின் தலைவர்களுக்கு முதல் நாள் அழைப்பு விடுக்கப்படுகின்றது. அந்த அழைப்பை ஒரு பெரும் பாக்கியம் போன்றே, கட்சிகளும் பாவனை செய்கின்றன? இதிலிருந்தே தமிழ் தலைவர்களை எவ்வாறு சிங்கள அரசியல்வாதிகள் மதிக்கின்றனர் என்பது தெளிவாகின்றதல்லவா!

முதலில் தமிழ் தலைவர்கள் என்போர், தங்களை மற்றவர்கள் தலைவர்களென்று கருதுமளவிற்கு நடந்து கொள்ள வேண்டும். தங்களை அவமதிக்கும் செயல்களுக்கு கடுமையான எதிர்வினைகளை ஆற்ற வேண்டும். அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சிகளின் தலைவர்களும் ஒன்றிணைந்து, தங்களின் எதிர்ப்புக்களை பதிவு செய்ய வேண்டும். ரணிலுடன் தொடர்ந்தும் நாங்கள் பேச விரும்பவில்லையென்று பகிரங்கமாக அறிவிக்க வேண்டும். தற்போதைய சூ ழலில் ரணில் விக்கிரமசிங்க ஒரு பலமான நபரல்ல. பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொண்டிருப்பவர். இவ்வாறான நிலையில் கூட, தமிழ் கட்சிகள் இரண்டாம் பட்சமாக நடத்தப்படுகின்றார்கள் என்றால், ஒரு வேளை அவர் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர், தமிழ் கட்சிகளை எவ்வாறு நடத்துவார்?

# உதவுமா இந்தியா?

சிங்களத் தலைமைகளின் ஊடாக இந்தியாவின் நலன்களை உறுதிப்படுத்த முடியாத போது, தமிழ் தலைமைகளை வளைத்துப் போட்டு, தமிழ் அமைப்பு களுக்கு ஆயுதங்களைக் கொடுத்து, காரியம் சாதித்துக் கொண்டது இந்தியா


வடக்கு, கிழக்கில் பௌத்தமயமாக்கல் தொடர்ந்தால், இந்தியாவில் உள்ள இந்து அமைப்புகளின் உதவியைக் கோரப் போவதாகக் கூறியிருக்கிறார், பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ் வரன். ஆங்கில ஊடகம் ஒன்றில் வெளி யான அவரது இந்தக் கருத்து, பரவ லாக கவனிக்கப்பட்ட ஒன்று.

அதேசெய்தியில், பாராளுமன்ற உறுப்பி னர் மனோகணேசன், மாறுபட்ட கரு த்தை கூறியிருக்கிறார். பௌத்த மயமாக் கலுக்கு எதிராக இந்தியா எதையும் செய்யாது, செய்வதற்கு வாய்ப்பில்லை என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இலங்கையில் தமிழர்களும், தமிழர்களின் பாரம்பரிய வாழ்விடமான வடக்கு, கிழக்கும், பௌத்தமயமாக்கல் என்ற பாரிய நெருக்கடிக்குள் சிக்கியிருக் கின்ற தருணம் இதுவாகும்.

இந்தச் சிக்கலில் இருந்து விடுபடுவது எப்படி, இந்தப் பிரச்சினையைத் தீர்க் கின்ற வழி என்ன என்று தெரியாமல் தமிழர் தரப்பு திணறிக் கொண்டிருக் கின்ற நிலையில் தான், இந்தியாவிலுள்ள இந்து அமைப்புகளை நாடுகின்ற வழியை பற்றிப் பேசியிருக்கிறார் சி.வி. விக்னேஸ்வரன்.

இலங்கைப் பிரச்சினையுடன் நேரடியாகத் தொடர்புபட்ட நாடு இந்தியா. இலங்கை



யின் உள்நாட்டு விவகாரங்களில் தாங்கள் நேரடியாகத் தலையிடவில்லை என்று கூறினாலும், இந்தியாவின் ஈடுபாட்டை யும், தலையீட்டையும் தவிர்க்க முடி யாது என்பது கடந்த 75 ஆண்டுகளில் தெளிவாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கைத் தமிழர்களுக்கும், தமிழ் நாட்டில் உள்ள தமிழர்களுக்கும் இருக் கின்ற தொப்புள் கொடி உறவு, வட இந்தியாவுக்கும் தென்னிலங்கைக்கும் இடையில் காணப்படும் பௌத்த, கலா சார உறவு என்பனவும், இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் அதன் அரசியல் கொள்கைகளுடன் இலங்கை நேரடி யாகத் தொடர்புபட்டிருப்பதாலும், இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் தலையீடுகளும், செல்வாக்கும் தவிர்க்க முடியாததாக இருந்து வந்திருக்கிறது.

அந்த செல்வாக்கு குறையும் போது, அதனை சமநிலைப்படுத்தும் வகையில், இந்தியா மாற்று நகர்வு ஒன்றை முன்னெடுக்கவும் தயங்கியதில்லை.

குறிப்பாக, சிங்களத் தலைமைகளின் ஊடாக இந்தியாவின் நலன்களை உறுதி ப்படுத்த முடியாத போது, தமிழ் தலை மைகளை வளைத்துப் போட்டு, தமிழ் அமைப்புகளுக்கு ஆயுதங்களைக் கொடு த்து, காரியம் சாதித்துக் கொண்டது இந்தியா.

பின்னர், இந்திய – இலங்கை உடன்பாடு ஏற்பட்டதும், தமிழ் அமைப்புகளை தானே கட்டிப் போட முயன்றது. அடங்க மறுத்த புலிகளையும் அழிக்க முற்பட்டது.

ஆக, இலங்கையில் தனது நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக தலையீடு செய்து வந்திருக்கும் இந்தியா, இலங்கை பல்வேறு நெருக்கடியான கால கட்டங்களில் இருந்த போது உதவி களை வழங்கவும் தவறவில்லை.

1971 இல் ஜே.வி.பி. கிளர்ச்சியின் போது, இந்தியா 150 கூர்க்கா படையினரை



அனுப்பி கட்டுநாயக்க விமான நிலையத் தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியது.

மூன்று போர்க்கப்பல்களை அனுப்பி, கொழும்பு துறைமுகத்தின் பாதுகாப்பை பலப்படுத்தியது. அது போலவே, அண்மையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட போதும், இந்தியா 4 பில்லியன் டொலர் வரை வழங்கி, நாடு முற்றாக மூழ்கிப் போகாத வகையில் காப்பாற்றி யது.

இதையெல்லாம் இலங்கை மீது கொண்ட கரிசனை, பற்றினால் மாத்திரம் இந்தியா செய்யவில்லை. அதற்கு அப் பால் இலங்கைக்கு உதவுவது என்ற பெயரில், வேறு நாடுகள் கால் வைத்து விடக் கூடாது என்ற நோக்கத்திலும் தான் இந்தியா தலையிட்டது.

இந்தியா தனது நலன்களை ஒட்டியே இதுவரை செயற்பட்டு வந்திருக்கும் நிலையில், அவ்வாறான நலன்களை உதாசீனப்படுத்தி விட்டு இந்தியா வேறெ ந்த தலையீட்டையும் செய்ய முனை யாது. தமிழர் பிரச்சினை தீவிரமடைந்த போது கூட, இந்தியா இரட்டை அணுகுமுறையையே கையாண்டது.

ஒரு பக்கத்தில் இலங்கையின் ஆட்சி யாளர்களை தன்வசப்படுத்த முயன்றது. இன்னொரு பக்கம் தமிழ்ப் போராளி களை அரவணைத்து தன் கட்டுப் பாட்டுக்குள் வைத்திருக்க முனைந்தது.

இலங்கை விவகாரத்தில் எந்த முடிவை எடுக்கும் போதும், அது இரண்டு பட்டிருக்கும் தரப்புகளில் ஒன்றை நோக்கிச் சாய்ந்திருப்பதை இந்தியா விரும்புவதில்லை. அது தனக்கு பாதி ப்பை ஏற்படுத்தும் என்று உறுதியாக நம்புகிறது புதுடில்லியின் வெளிவிவ காரக் கொள்கை.

2009 இறுதிப் போருக்குப் பின்னர் இந்தியா மீது ஈழத் தமிழர்களுக்கு ஆழ மான வருத்தமும், ஏமாற்றங்களும் இருந்த நிலையில், போரினால் பாதிக்கப் பட்டவர்களுக்கு 50 ஆயிரம் வீடுகளைக் கட்டிக் கொடுக்க முன்வந்தது. அது பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் எண்ணம் மாத்திரமன்றி, தமிழர்கள் இந்தியா மீது கொண்ட வெறுப்பை சமநிலைப்படுத்தும் ஒரு நகர்வும் கூட.

இப்படிப்பட்ட நிலையில் பௌத்த மய மாக்கலுக்கு எதிராக இந்தியாவிலுள்ள இந்து அமைப்புகளின் உதவியைக் கோருவதும், அவர்கள் ஊடாக இந்திய அரசாங்கத்தை அணுகுவதும் எந்தளவு க்கு சாத்தியப்படும் என்ற கேள்வி எழுகிறது.

இந்து அமைப்புகள் தற்போதைய இந்திய அரசாங்கத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பது உண்மை.

பா.ஜ.க. அரசாங்கத்தின் பின்னால், ஆர்.எஸ்.எஸ். போன்ற இந்துத்துவ அமைப்புகள் தான் இருப்பதாகவும், அவற்றின் விருப்பத்துக்கு ஏற்பவே ஆட்சி பெறுவதாகவும் இந்திய எதிர்க் கட்சிகள் தொடர்ச்சியாக குற்றம்சாட்டி வருகின்றன.

இந்திய அரசாங்கத்தில் இந்துத்துவ அமைப்புகளின் ஆதிக்கம் இருந்தாலும், அந்த அமைப்புகள், பௌத்தமயமாக் கலை எதிர்க்க முற்படுமா என்பது சந்தேகம் தான். தமிழ்நாட்டில் ஒரு காலத்தில் பௌத்த மதம் ஆழமாகப் பரவியிருந்தது. பாண்டிய, பல்லவர் அரசுகள் கோலோச்சிய காலங்களில் பௌத்தம் அங்கு ஆதிக்கம் செலுத்தி யது.

அப்பர், சுந்தரர், சம்பந்தர் போன்ற சைவ சமய நாயன்மார்கள் பௌத்த ஆதிக்க த்தை உடைத்து, சைவசமயத்தின் மீள் எழுச்சிக்கு வித்திட்டனர். அங்கே பௌத்த மயமாக்கலுக்கு எதிராக சைவ பெரியார்கள் செயற்பட்டது போன்று, இலங்கையில் பௌத்த மயமாக்கலுக்கு எதிராக இந்தியா செயற்படும் என்று எதிர்பார்க்க முடியாது.

அதற்கு முக்கியமான ஒரு காரணம், பௌத்தமும் இந்து மதத்தின் ஒரு பகுதி தான் என்று வட இந்தியர்கள் பலர் வலுவாக நம்புகின்றனர்.

கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களின் எழுச்சியைத் தான், இந்தியா தீவிரமான விடயமாக பார்க்கிறது. அவற்றின் மதமாற்ற பரவலைத் தடுக்கவே முற்படு கிறது.


இவ்வாறான சூழலில், பௌத்த மயமாக் கலை இந்தியா அச்சுறுத்தலாக கருத வில்லை. மனோகணேசன் கூறுகின்ற இன்னொரு காரணமும் இங்கு கவன த்தில் கொள்ள வேண்டியது தான்.

பௌத்தம் இந்தியாவில் தோன்றிய ஒரு மதம். அத்தகைய மதம், இலங்கையிலும் பிறநாடுகளிலும் பரவி வருவதை தடுப்ப தற்கு இந்தியா துணை போகாது என்பது அவரது வாதம். அது சரியான தும் கூட.

இலங்கையின் பௌத்த மத வளர்ச்சிக் கும், கலாசார, பண்பாட்டு உறவுகளை வலுப்படுத்துவதற்கும் இந்தியா கூட் டாக முயற்சித்து வருவது தெரிந்ததே. அதற்காக பெருமளவு உதவிகளையும் வழங்கியிருக்கிறது இந்தியா.

இவ்வாறான நிலையில், இலங்கையில் பௌத்தமயமாக்கலை இந்தியா எதிர்க் கும், அல்லது தடுக்கும் என்று எவ் வாறு எதிர்பார்க்க முடியும்?

**கட்டுரையாளர்**
**தமிழகத்தில் இருந்து**
**கேணல் ஹரிகரன்**



பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ் வரன் பௌத்தமயமாக்கலை தடுப்பதற்கு இந்தியாவின் இந்து அமைப்புகளுடன் பேச்சுக்களை நடத்தியிருப்பதாக கூறி யிருக்கிறார்.

ஆனால், அந்தப் பேச்சுக்கள் எதுவும், தீர்க்கமான கட்டத்தை அடையவில்லை என்பதை அவரது கருத்துக்களில் இரு ந்தே உணரமுடிகிறது. சி.வி. விக்னே ஸ்வரன் அரசியலுக்கு வந்து 10 ஆண்டுகளாகி விட்டன.



தமிழருக்கு எதிரான சிங்கள பௌத்த பேரினவாத போக்கு இன்று நேற்றல்ல. அவர் அரசியலுக்கு வர முன்னரும் இருந்தது. இப்போதும் இருக்கிறது.

இவ்வாறான நிலையில் பௌத்த மயமாக்கலை தடுக்க அவர் தனக்கு செல்வாக்கு இருப்பதாக கருதினால், இந்தளவுக்கும் இந்தியாவில் அதனைப் பயன்படுத்த முயன்றிருக்க வேண்டும். இனி மேலும் தொடர்ந்தால் இந்தியா விலுள்ள இந்து அமைப்புகளின் உதவி யைக் கோர நேரிடும் என்று எச்சரித்துக் கொண்டிருப்பதில் அர்த்தம் இல்லை. ஏனென்றால் வெள்ளம் எப்போதோ தலைக்கு மேல் வந்து விட்டது.



**உடன் இறைச்சி விநியோகம்**

**பிறந்தநாள் விழாக்கள், ஊர் ஒன்றுகூடல்கள், வீட்டுக் கொண்டாட்டங்கள் மற்றும் உங்கள் வீட்டுத் தேவைகளுக்கு ஏற்றவாறு ஊர் ஆட்டிறைச்சி சிறு சிறு துண்டுகளாக மொத்தமாகவும் சில்லறையாகவும் துப்பரவாக வெட்டிக் கொடுக்கப்படும்.**


**தொடர்புகளுக்கு**

**ஸ்ரீ 647 328 8880 சானு 416 456 3051**

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! சாதகமான பலன்கள் கிடைக்கும். பொருளாதார முன்னேற்றம், பணவரவில் திருப்தி இருக்கும். எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். உடல் ஆரோக்கியம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். கணவன் மனைவிக்கிடையே ஒற்றுமை உண்டாகும். பிள்ளைகள் மூலம் பெருமை ஏற்படும். உறவினர்கள் வருகையும் அவர்களால் நன்மையும் உண்டாகும்.



ரிஸபராசி அன்பர்களே! வீண் செலவு ஏற்பட்டாலும் அதை சமாளிக்கும் விதத்தில் வரவும் இருக்கும். கனவுகளால் தொல்லை ஏற்படலாம். உஷ்ண சம்பந்தமான நோய் உண்டாகலாம். குடும்பத்தில் தேவையற்ற பிரச்னைகள் உருவாகலாம். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டாலும் சரியாகிவிடும். வீடு, வாகனம் தொடர்பான செலவுகள் உண்டாகலாம். பிள்ளைகளுக்காக கூடுதல் செலவு செய்ய வேண்டி இருக்கும்.





மிதுனராசி அன்பர்களே! சாமர்த்தியம் அதிகரிக்கும். மனவருத்தம் நீங்கும். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. தனாதிபதி சூரியன் சஞ்சாரத்தால் பணதேவை ஏற்பட்டாலும் அதை திறமையாக சமாளித்து விடுவீர்கள். குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை காணப்பட்டாலும், குடும்ப உறுப்பினர்களுக்காக மருத்துவ செலவு செய்ய வேண்டி இருக்கலாம். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது.




கடகராசி அன்பர்களே! திட்டமிட்டு எதையும் செய்ய வேண்டியது அவசியம். வீண்பழிவர வாய்ப்பு உள்ளதால் எதிலும் கவனம் தேவை. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன், மனைவிக்கிடையே வாக்குவாதம், பிள்ளைகளின் செயல்களால் மனவருத்தம் போன்றவை ஏற்படலாம். வீட்டில் உள்ள பொருட்களை கவனமாக பாதுகாப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் வாக்குவாதம் உண்டாகலாம்.




சிம்மராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தாமதம் உண்டாகும். சகோதரர் வழியில் நன்மை உண்டாகும். குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் நீங்கும். கணவன் மனைவிக்கிடையில் இருந்த சங்கடங்கள் தீரும். பிள்ளைகள் கல்வி பற்றிய கவலை நீங்கும். வீட்டிற்கு தேவையான பொருட்கள் வாங்குவீர்கள். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும்.




கன்னிராசி அன்பர்களே! எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். பூமி, வீடு தொடர்பான பிரச்னைகள் நல்ல முடிவுக்கு வரும். சகோதரர்களுடன் இருந்த மன வருத்தம். நீங்கும். எதிர்பாராத செலவு உண்டாகலாம். குடும்பத்தினரின் பேச்சுக்கு எதிர்த்து பேசுவதை தவிர்ப்பது நன்மை தரும். கணவன், மனைவிக்கிடையே வீண் வாக்குவாதங்கள் ஏற்படலாம். பிள்ளைகளிடம் அன்பாக பழகுவது நல்லது.




துலாம்ராசி அன்பர்களே! மன சஞ்சலம் நீங்கும். சிறிய விஷயத்துக்கு கூட கோபம் வரலாம். கட்டுப்படுத்துவது நன்மை தரும். குடும்பத்தினரின் செயல்பாடுகள் மகிழ்ச்சியை கொடுக்கும். கணவன், மனைவிக்கிடையே மனம் விட்டு பேசி எடுக்கும் முடிவுகள் நல்ல பலன் தரும். பிள்ளைகளை அனுசரித்து செல்வதும், அவர்கள் போக்கில் விட்டு பிடிப்பதும் நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான வீண் அலைச்சல் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கைக்கு வருவதில் தாமதம் ஏற்படலாம்.




விருச்சிகராசி அன்பர்களே! சிக்கல்கள் தீரும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். பொருளாதார நிலை உயரும். குடும்பத்தில் உங்களுக்கு எதிராக பிரச்சனையை உண்டாக்கியவர்கள் தானாகவே அடங்கி விடுவர். வீட்டில் சுப காரியம் நடக்கும். திருமண காரியங்களில் சாதகமான போக்கு காணப்படும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். மதிப்பு கூடும். தொழில் வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் தீரும். கடன் கட்டுக்குள் இருக்கும்.






தனுசுராசி அன்பர்களே! வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நன்மை தரும். வேலை பளு காரணமாக நேரம் தவறி உணவு உண்ண வேண்டி இருக்கும். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு வரலாம். விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. சிலர் குடும்பத்தை விட்டு பிரிந்து வெளியில் தங்க நேரலாம். தொழில் வியாபாரத்தில் பார்ட்னர்களை அனுசரித்து செல்வது நல்லது. புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பர்.



மகரராசி அன்பர்களே! தேவையற்ற மனக்கவலை அகலும். வழக்கு விவகாரங்களில் இருந்த தாமதமான போக்கு நீங்கும். நிர்பந்தமாக வெளியூர் பயணம் செல்ல நேரலாம். குடும்பத்தில் இருப்பவர்களால் வீண் பழி ஏற்பட வாய்ப்பு உண்டு. எதிர்பாராத செலவு உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே மனஸ்தாபங்கள் வரலாம். பிள்ளைகளின் செயல்பாடுகளில் கவனம் தேவை. ஆயுதங்களை பயன்படுத்தும் போது கவனம் தேவை.




கும்பராசி அன்பர்களே! பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சனைகளில் சாதகமான நிலை காணப்படும். தான தர்மம் செய்யவும், ஆன்மிக பணிகளில் ஈடுபடவும் தோன்றும். நீண்ட தூர பயணத்தின் போது கவனம் தேவை. குடும்பத்தில் எதிர்பாராத செலவு உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே திடீர் மன வருத்தம் ஏற்படலாம். பிள்ளைகளின் செயல் ாடுகள் மனதுக்கு திருப்தி அளிக்கும்.




மீனராசி அன்பர்களே! அனுகூலமாக அனைத்து காரியங்களும் நடக்கும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் செல்ல நேரலாம். உடல் ஆரோக்கியம் உண்டாகும். குடும்பத்தினரை அனுசரித்து செல்வதன் மூலம் எல்லா பிரச்னைகளும் சரியாகும். கணவன் மனைவிக்கிடையே இருந்த மனஸ்தாபம் நீங்கும். பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக முக்கிய பணிகளை மேற்கொள்வீர்கள். உறவினர்களிடம் வீண் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# கலைஞர் கருணாநிதி விட்டுச் சென்ற பாரம்பரியம்

(18ம் பக்கத் தொடர்ச்சி) சட்டத்தை முடிந்த அளவு செயல்படுத்தியது, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், பெண்களுக்கு சொத்தில் பங்கு அளிக்கும் சட்டம், ஏழைப் பெண்களுக்கு திருமண நிதியுதவி, விவசாயிகள் தங்கள் பொருட் களை விற்பனை செய்ய உழவர் சந்தை களை அமைத்தது, எல்லா சாதியினரும் ஒன்றாக வசிக்க சமத்துவபுரங்களை உருவாக்கியது, மாணவர்களுக்கு இலவசப் பேருந்து போன்ற மு. கருணாநிதி அறிமுகப்படுத்திய திட்டங்களே திராவிட மாடல் ஆட்சியின் முக்கிய அம்சங்களாக அமைந்திருக்கின்றன.

மு. கருணாநிதியின் மற்றொரு முக்கிய அம்சம், மாநிலத்திற்கென ஒரு நீண்ட காலப் பார்வையை உருவாக்கியது. அந்தப் பார்வையாலேயே 1971லேயே தமிழ்நாடு முழுமையாக மின்மயமானது. இந்தப் பார்வையின் அடிப்படையிலேயே இந்திய உணவுக் கழகத்தைப் போல தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் உருவாக்கப்பட்டது. குக்கிராமங்களுக்கும் பேருந்து வசதியை ஏற்படுத்தும் நோக்கில், தனியார் பேருந்து நிறுவனங்கள் நாட்டுடமையாக்கப்பட்டு மிகப்பெரிய போக்குவரத்துக் கழகங்கள் உருவாக்கப்பட்டன.

தகவல் தொழில்நுட்பத் துறை மிகப் பெரிய புரட்சியை ஏற்படுத்தப் போகிற தென கணித்து நாட்டிலேயே முதல் மாநிலமாக 1997ல் அதற்கென தனிக் கொள்கையை உருவாக்கினார் கருணா நிதி. இதற்கு ஏழாண்டுகளுக்குப் பிறகு தான் தேசியக் கொள்கை உருவாக்கப் பட்டது. இதற்குப் பிறகு கட்டப்பட்ட டைடல் பார்க், முதலீடுகளை ஈர்ப்பதில் முக்கியப் பங்கு வகித்தது. தற்போது திரும்பிப் பார்க்கையில், தமிழ்நாடு அடைந்த தொழில் முன்னேற்றத்தின் குறியீடாக காட்சியளிக்கிறது அந்தக் கட்டடம்.

மு.கருணாநிதியின் நீண்ட ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்பட்ட முன்னோடித் திட்டங்களையும் சிறப்பான கொள்கைகளையும் தொடர்ந்து பட்டியலிட்டுக் கொண்டே போகலாம். ஆனால், தற்போதைய சூழலில் மிக முக்கியமானதாக இருப்பது அவர் வலியுறுத்திய கூட்டாட்சித் தத்துவம் தான். இப்போது வங்க அரசுக்கென்று சில தனி உரிமைகள் இருக்கின்றன என்றால் அத ற்கு கருணாநிதி தமிழ்நாட்டுக்காகப் போராடிப் பெற்ற உரிமைகள்தான் காரணம் என்பதை உணர்கிறேன். கருணாநிதியைப் போல எங்களுடைய உரிமைக்காக, நலன்களுக்காகப் போராட எங்களு க்கு ஒரு தலைவர் கிடைக்கவில்லையே என ஏங்குகிறேன்' என தன்னுடைய 'வங்காளிகளுக்குமான போராளி கருணாநிதி' கட்டுரையில் குறிப்பிடுகிறார் மேற்கு வங்கத்தைச் சேர்ந்த பங்ளா போக்கோ அமைப் பின் கர்க சாட்டர்ஜி. அவர் அந்தக் கட்டுரையை பின்வரும் வரிகளோடு முடிக்கிறார்: 'இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்களுக்கு இணையான மரியாதையும் கண்ணியமும் எங்களுக்கும் வேண்டும் என்று கருதும் கோடிக்கணக்கான பிறமொழி பேசும் இந்தியர்கள் ஒவ்வொருவராலும் கருணாநிதி ஒரு போராளியாக நெடுங்காலத்திற்கு நினைவுகூரப்படுவார். நன்றி:- பிபிசி

# மதுசிகன்:- காரிருள் சூழ்ந்த இலங்கையின்.....

16ம் பக்கத் தொடர்ச்சி) ஆனால் அதை நான் மட்டும் செய்ய முடியாது. அதைப் பற்றிய விழிப்புணர்வை மீனவர்களிடத்திலும் மக்களுக்கும் உருவாக்க முயற்சித்தேன். என்றாலும் நான் எதிர்பார்த்த அளவுக்கு அது நிறைவேறவில்லை. இந்தச் சின்னப் பையன் என்ன சொல்கிறான் என்று அவர்கள் யோசித்திருக்கக் கூடும். அப்படியென்றால் நான் சொல்வதை ஏற்கக் கூடிய அளவுக்கு நான் ஒரு சாதனையாளனாக இருக்க வேண்டும். எனக்கான தகுதியை உருவாக்க வேண்டும். அப்படி ஒரு அடையாளம் எனக்கு ஏற்பட்ட பிறகு சொன்னால், ஓரளவாவது கேட்பார்கள் என்று எண்ணினேன். இந்த எண்ணத்தோடு எனக்கு வேறு சில ஐடியாக்களும் வந்தது. 1.பிளாஸ்டிக் இல்லாத கடலை (plastic-free ocean) உருவாக்க வேண்டும். 2.என்னுடைய பாடசாலையான சென் மைக்கல் கல்லூரியின் 150 ஆவது ஆண்டுக்கு நான் ஒரு அடையாளத்தை உருவாக்க வேண்டும். 3.இன்றைய இளைஞர்கள் எதிர்கால இலக்கின்றி போதைப் பொருளுக்கு அடிமையாதல், கைத்தொலைபேசியில் தம்மைத் தொலைத்தல், குடும்பங்களிலும் வெளியிலும் ஏற்படுகின்ற சின்னச் சின்னப் பிரச்சினைகளுக்காகத் தற்கொலை வரை செய்தல் போன்றவற்றிலிருந்து விடுபட்டு, தமக்குப் பிடித்ததை, தமக்கு விருப்பமானதைத் தெரிவு செய்து சாதனை செய்யலாம் என்ற நம்பிக்கையை உருவாக்குதல் என எண்ணினேன். எனவே ஆறுமாதக் கடுமையான பயிற்சியின் பிறகு பாக்குநீரிணைக் கடலை நீந்திக் கடக்கும் முடிவுக்கு வந்தேன். இதற்கான ஏற்பாட்டை நண்பர்களும் என்னுடைய பெற்றோரும் செய்தனர். இதைப்பற்றி இந்தியாவுக்கும் அறிவிக்கப்பட்டது. 2023 மே 28 அன்று பாக்குநீரிணையை நீந்திக்கடந்தேன். இதற்கு எனக்கு 12.53 நிமிடங்கள் தேவைப்பட்டது. அன்று கடற்காற்று — எதிர்காற்றுச் சற்றுக் கூடுதலாக இருந்தது. ஆனாலும் இதை நான் மறுபடியும் நீந்திக் கடப்பேன். இதை விடக்குறைந்த நேரத்தில் நீந்திக் கடக்க வேண்டும். அதை விட இரு வழியாக பாக்குநீரிணையில் நீந்திப்போய் திரும்பி நீந்தி வரவேண்டும். அப்போதுதான் எனக்கு முன்னர் செய்யப்பட்ட சாதனையை முறியடிக்கலாம். அப்படி முறியடிப்பேன் என்று நம்புகிறேன்.

ஏற்கனவே என்னுடைய பயிற்சி ஆசிரியரான றொஸான் அபேயசுந்தர இதே பாக்கு நீரிணையில் இருவழி நீச்சலை 28 மணித்தியாலயங்கள், 19 நிமிடங்கள், 43 செக்கன்களில் வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளார். இதனை நான் முறியடிக்க வேண்டும். அதற்கு முன்பு, ஆழிக்குமரன் ஆனந்தன் 1971 இல் பாக்குநீரிணையை இருவழி நீச்சலில் 51 மணித்தியாலங்கள் எடுத்துச் சாதனை செய்திருந்தார். அந்தச் சாதனை கடந்த 50 ஆண்டுகளாக யாராலும் முறியடிக்கப்படாமல் இருந்தது. அதை றொஸான் முறியடித்தார். ஆரம்பத்தில் மு. நவரத்தினசாமி என்பவர் 1954 மார்ச் 26 இல் பாக்குநீரிணையை நீந்திக் கடந்திருந்தார். அப்பொழுது அவருக்கு வயது 44. அவர் நீச்சலுக்கு எடுத்துக் கொண்ட நேரம், 27 மணித்தியாலங்கள்.

இப்படியே இந்தச் சாதனைப் பட்டியல் உள்ளது. நான் இவர்கள் எல்லோரையும் விட வயதில் சிறியவன். நான் நீந்தி வந்தபோது மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா, மன்னார் மாவட்ட சாரணர் இயக்க ஆணையாளர் திரு. ஸ்ரான்லி டிமெல் லம்பேர்ட், வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் சார்ள்ஸ் நிமிலநாதன், வினோநோகராதலிங்கம், ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தம் கருணாகரம் (ஜனா) எனப் பலர் வரவேற்றனர். என்னுடைய இந்தச் சாதனையை அறிந்த என்னுடைய பாடசாலைச் சமூகம் பெரிய மகிழ்ச்சியை அடைந்தது. அவர்கள் பெரிய வரவேற்பைத் தந்தனர். மாவட்ட மக்களும் அப்படித்தான், ஆதரவளித்தனர். உறவினர்கள், ஊடகங்கள் எல்லாம் என்னைப் பெருமைப்படுத்தினார்கள். இப்பொழுது நான் மாசற்ற கடலைப்பற்றி அதிகமாகச் சிந்திக்கிறேன். அதைப்போல நீச்சலில் பலசாதனைகளைச் செய்ய வேண்டும். ஆங்கிலக் கால்வாயையும் நீந்திக் கடக்க வேண்டும். தொடர்ந்து கடல் சம்மந்தமாகவே படிக்க விரும்புகிறேன். நான் படித்தது கணிதத்துறை தான். என்றாலும் கடலில் பல விடயங்களைப் படிக்கலாம் என எண்ணுகிறேன். கடலில் பல சாதனைகள் செய்யலாம். இந்தப் பூமியில்

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support

## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: **416.949.0404** / Fax: **416.948.0303** • info@sasilaw.ca • www.sasilaw.ca



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து
தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள்
பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்.
அனுபவத்துடன் கூடிய அன்பான
சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*


We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்

வீடு
வாங்க...
விற்க...

**Ravi. Paramu**
Broker

Cell: 416-262-4176
Bus: 416-298-3200

HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6





**RANJANI THIRUKESWARAN LAW OFFICE**

- Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
- Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
- Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
- Family Law: குடும்ப வழக்குகள்
- Last Wills: உயில் தயாரித்தல்
- Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்

2855 Markham Road
Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242

Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)







TAX CENTRIC

**Gayatiri Thavan**
Tel: 289.569.0169 • Fax: 289.569.0167
Email: taxcentric@outlook.com
www.taxcentric.ca
2338 HURONTARIO ST., UNIT 100A, MISSISSAUGA, ON L5B 1N1

உங்கள் கணக்கியல் வருமானவரி சம்பந்தமான தேவைகளுக்கு அனுபவமுள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

Tel: 289.569.0169

Servicing Clients from Mississauga, Brampton, Hamilton, St. Catharines, Niagara, Kitchener, Cambridge and Guelph

- Personal Tax
- Corporate Tax
- Book Keeping & Accounting
- Payroll Services
- GST/HST Filing
- Corporate Services
- Business Startup
- Financial Planning







OVER 10 YEARS EXPERIENCE
**RAVI VEERASINGAM B.A**
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*





RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599* FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500





**உங்களிடம் ..**
**திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய கடன் இருக்கிறதா?**
வணிக உரிமையாளர்களுக்கும்
சுயதொழில் செய்வோருக்கும்
மகிழ்ச்சியான செய்தி!
உங்கள் வருமான மதிப்பீடுகள் இல்லாமல்
மாதந்தோறும் $5000 வரை அங்கவீனக்
காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.

விபரங்களுக்கு அழையுங்கள்
**அஜித் சபாரட்ணம்**
647-401-5800
416-439-2800

10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.

